Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

18 வது வருடத்தில்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

நதி 18 | பாலம் 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2008

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

Thinking of buying a new home ? & Commercial Properties ?
"CALL US FIRST" TO GET PRE-APROVAL
Direct: 416-666-5540
நம்பிக்கை, நாணயம், நேர்மை, அனுபவம் நெறிபடுத்தப்படும்
Chandran Ponnampalam
Senior Mortgage Consulton
200 CONSUMERS RD. #301, TORONTO ON
TEL: 416-279-1159

All Epson ink catridges $7.99
All Brother ink Catridges $8.99
All Canon (non-chipped) ink $7.99
HP Laserjet Q2612A (12A) $49.99
Mention This code and save an additional $5.00 : 761605
A1 Ink Rainbow Inc.
T: 416.286.0333
F: 416.286.0334
• Compatible Toner & Ink
• Unbeatable prices
• 100% Satisfaction Guaranteed
• Expert Advice & Services
• Free Delivery
hp invent, LEXMARK, Canon, XEROX, SAMSUNG, Panasonic, OKI

# கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மே மாதம்?



இலங்கையின் கிழக்கு மாகாண சபைக்கு இம்மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 3 ஆம் திகதி வரை வேட்புமனுவை கோருவதற்கும் மே இரண்டாம் வாரம் தேர்தலை நடத்துவதற்கும் தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதனைத் தேர்தல்கள் தொடர்பான சிரேஷ்ட அதிகாரி பந்துல குலதுங்க உறுதிப்படுத்தினார்.

கிழக்கு மாகாண சபை வேட்பு மனுக்கோரும் திகதியை மார்ச் 14 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்காவிற்கு அறிவித்திருந்தார். இந்நிலையிலேயே கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுகுறித்த அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியது.

மே மாதம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் வெசாக் நிகழ்வுகள் நடைபெறவுள்ளதால் அதற்கு முன்னதாக மே மாத இரண்டாம் வாரத்தில் தேர்தலை நடத்தவும் தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, ஐ.தே.க. அடுத்தவாரம் தேர்தல் தொடர்பில் முக்கிய தீர்மானம் மேற்கொள்ளுமென அக்கட்சியின் எம்.பி.யான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரம் கிழக்கு மாகாண பள்ளிவாசல் சம்மேளனம், கிழக்கு மாகாண ஜம்மியதுல் உலமா சபை மற்றும் மாகாணக் கட்சி முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடி தேர்தலில் தனித்து அல்லது கூட்டுச்சேர்ந்து போட்டியிடுவது குறித்து தீர்மானிக்கப்படுமென முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹஸன் அலி எம்.பி.தெரிவித்தார். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது 50 க்கு 50 ஆக காணப்படுவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.சந்திரகாந்தன், சந்திரநேரு தெரிவித்ததுடன் அடுத்தவாரம் இது பற்றித் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தீர்மானிக்குமெனவும் குறிப்பிட்டார்.

இதே சமயம் இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்களின் சூத்திரதாரிகள் அரசுப் படையினரும் அவர்களோடு கூட்டாக இயங்கும் துணைப்படைக் குழுவினருமே என்பதைச் சுட்டிக்காட்டி இத்தவறுகளுக்கு இலங்கை அரசைப் பொறுப்பாக்கும் அமெரிக்க அரசின் அறிக்கை இலங்கையை ஆத்திரம் அடையச் செய்துள்ளது.

இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்களினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் சிறுபான்மையினரான தமிழ் இனத்தைச் சேர்ந்த இளம் ஆண்களே என்பதையும் அறிக்கை தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

ஏற்கனவே இலங்கையின் மனித உரிமை மீறல் போக்கைக் கவனத்தில் எடுத்துள்ள அமெரிக்கா, இலங்கைக்கு ஆயுதத் தளபாடங்களை வழங்குவதைத் தடைசெய்து முடிவெடுத்திருக் கின்றது. இலங்கை மனித உரிமைகளைச் சரிவரப் பேணுகின்றது என்பது உறுதிப்படுத்தப்படும் வரை இந்தத் தடை தொடரும் என்றும் அமெரிக்கா தீர்மானித்திருக்கின்றது. அதேசமயம் அமெரிக்காவின் மிலேனியம் உதவித் திட்டத்தின் கீழான உதவிகளையும் இதே காரணத்துக்காக இலங்கை இழந்து தவிப்பதும் கவனிக்கத்தக்கது.

அமெரிக்காவின் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் உள்ள புலிகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்காவின் அறிக்கை கூறும் மிதமான போக்கு வாசகங்களோடு இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பின் செயற்பாடு தொடர்பாக அதே அறிக்கை கூறும் காட்டமான சூடான வாசகங்களை ஒப்பிடும்போது, இலங்கை அரசு தொடர்பாக அமெரிக்கா காட்டமாக உள்ளது என்று புரிகின்றது.

இலங்கை மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் அண்மையில் அமெரிக்க அரசுத்துறையால் வெளியிடப்பட்ட கருத்துகள் குறித்து இலங்கையும் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ராபர்ட் ஓ பிளேக் அவர்களை, இன்று அழைத்த இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம அவர்கள், அவரிடம் இது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து அமெரிக்கத் தூதுவருடன் தான் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக கூறிய இலங்கை வெளியுறவு அமைச்சர், அமெரிக்க அரசுத்துறையின் அந்த அறிக்கை, ஆதரம் எதுவும் அற்றது என்றும், இராணுவ ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் தடுமாறிப்போயிருக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு, அது புத்துயிர் அளிப்பதாக அமைந்து விட்டது என்றும் அமெரிக்கத் தூதுவரிடம் தான் குறிப்பிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த விவகாரம் குறித்து அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், இலங்கை வெளியுறவு அமைச்சருடனான, அமெரிக்கத் தூதுவரின் சந்திப்பு ஆக்கப்பூர்வமாக இருந்ததாகவும், ஆயினும் தமது நிலைப்பாட்டில் அமெரிக்க அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேபோல இலங்கையில் பலவந்தமாக ஆட்களைக் காணாமற் போகச் செய்தல், சித்திரவதை போன்ற மனித உரிமை மீறல்கள் தொடருவது குறித்து அவுஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளும் பல அரச சார்பற்ற அமைப்புகளும் தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் கவலை வெளியிட்டுள்ளன.

பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தல், சித்திரவதை மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியன குறித்து மனித உரிமை கவுன்ஸிலில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்த நாடுகள் இக்கவலையை வெளியிட்டுள்ளன. காணாமல் போதலுக்குக் காரணமானவர்கள் உடனடியாக நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

2006 இல் மீண்டும் மோதல் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஊடகங்கள் மீதான அச்சுறுத்தலும், ஊடக சுதந்திரமும் மிகவும் முக்கியமான விடயங்களாக மாறியுள்ளன என ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலில் உரையாற்றிய சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி அனிட்டா கோ தெரிவித்துள்ளார். சர்வதேச மன்னிப்புச் சபை இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ள அவர் பத்துக்கும் மேற்பட்ட ஊடகப் பணியாளர்கள் சட்ட விரோதமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

அடமானக் கடன் செய்து கொடுப்பதே! என் பணி
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM™ Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial
Raj A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/ GTA Realty Inc. Real Estate Brokerage*
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3

கதிர்
GTA Square SOLD OUT ! Only 12 units left
Middlefield & finch
GTA SQUARE
Great Opportunity
Don't Miss Out
24 hr. 416 856 6900
Office 416 321 6969
Call me for a change
Kathir S Kathirgamanathan P. Eng.
kathirs@rogers.com Sales Representative
HomeLife / GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, #206, Toronto
Independently owned and operated

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

மார்ச் 11 அன்று மேலை நாடுகளின் மத்திய வங்கிகள் பணச்சந்தையில் ஒருங்கிணைந்த முறையில் நடவடிக்கை எடுத்தன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் உலகமத்திய வங்கிகள் பல மில்லியன்களை வங்கிளுக்குக் கடனாகக் கொடுத்தன. பணச்சந்தையில் வங்கிகளுக்கு இடையே காணப்படும் பணத்தட்டுப்பாடே இதற்குக் காரணம். வங்கிகள் ஒன்றை ஒன்று நம்ப மறுக்கின்றன. ஒன்றுக்கு ஒன்று முந்தைய காலங்களைப் போல கடன் தர யோசிக்கின்றன. இந்த சூழ்நிலையில் சந்தையில் பணத்தட்டுப்பாட்டைப் போக்கவே மத்தியவங்கிகள் மீண்டும் மீண்டும் சமீப காலங்களில் கடந்த ஆறுமாதங்களில் சந்தையில் தலையிட நேரிட்டது. இனிவரும் மாதங்களிலும் இது போன்ற சூழ்நிலைகள் மீண்டும் மீண்டும் உருவாகலாம். ஏனென்றால் வியாதியின் ஆழம் இன்னும் யாருக்கும் சரியாகத் தெரியவில்லை. அந்த வியாதிதான் என்ன? அமெரிக்க வீட்டுக்கடன்பிரச்சினையும், அதனால் ஏற்பட்டு வரும் அமெரிக்கப் பொருளாதாரத்தின் சரிவும் தான்.

இந்த மத்திய வங்கிகளின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியில் Bank of Canada வும் (கனடிய மத்திய வங்கி) இணைந்தது. 4 மில்லியன் டொலர்களை Bank of Canada இவ்வாறு சந்தையில் செலுத்தியது. அமெரிக்க மத்திய வங்கி சந்தையில் செலுத்தியதோ 200 மில்லியன் டொலர்கள்.

சந்தையில் பீதி அவ்வப்போது எழும் போதெல்லாம் ஏறிய விலைகள் மீண்டும் விழுகின்றன. பீதி, நம்பிக்கை, பீதி, நம்பிக்கை என்பது அலை அலையாக சந்தையில் கடந்த ஒன்பது மாதங்களாக வந்து கொண்டிருக் கின்றது. இப்போது அடித்து ஓய்திருப்பது மூன்றாவது பெரிய அலை என்று சொல்லலாம். இந்த அலையில் பாதிக்கப்படாமல், தொடர்ந்து கனடாவில் வீட்டு விலைகளும் வீட்டுச்சந்தையும் நல்ல முறையில் இருந்து வருவதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன. 2008 இல் தொடர்ந்து வீட்டின் விலைகள் மற்றும் விற்பனை தொடர்ந்து அளவான ஏறுமுகமாகவே இருக்கும் என்று ஸ்கோஷியா வங்கியின் ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. நல்ல செய்தி தான்.

உலகின் வெற்றி பெற்ற முதலீட்டாளர்களைக் கவனித்தால் அவர்கள் பணத்தை எங்கே முதலீடு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்?

பங்குச்சந்தை பங்குகள்? கடன் பத்திரங்கள்? வங்கி வைப்புக்கள்? றியல் எஸ்டேட்? விடை எல்லாவற்றிலும் தான்.

1995 டிசம்பரில் கனடாவில் ஒரு வீட்டின் சராசரி விலை 150,720 டொலர்களாக இருந்தது. இதே பணத்தை ஒருவர் ஸ்கோஷியா வங்கியின் பலன்ஸ் பண்ட்ஸில் முதலீடு செய்திருந்தால், பத்தாண்டுகளுக்குப் பிறகு அதில் அதிக இலாபம் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

2006 ஆம் ஆண்டு இறுதியில் 1995 வாங்கிய வீட்டின் விலை 275,387 டொலர்கள் கனடியன் பாலன்ஸ் பண்ட்ஸின் மதிப்பு 336,951 டொலர்கள்.

நீண்ட காலத்திற்கு என சேமிக்கும் போது தகுந்த பங்குச் சந்தை முதலீடுகள் வேகமான வளர்ச்சியைக் கொடுத்து வருகின்றது என்று சரித்திரம் மீண்டும் மீண்டும் தெரிவிக்கின்றது. ஒரு குறைந்த அளவு ஆரம்பத் தொகையுடன் நல்லதோர் மியுச்சுவல் பண்டில் பணத்தைப் போட்டு, பிறகு அதிலேயே மாதந்தோறும் நூறு டொலர்கள், 200 டொலர்கள் என்று சேமித்து வந்தால், காலப் போக்கில் மிக பெரிய தொகையாக அது வளர்ந்திருக்கும்.

பங்குச் சந்தையில் எப்படி ஏற்ற இறக்கங்கள் நிச்சயமானதோ, அவ்வாறே நீண்ட காலத்திற்கு நல்ல பங்குச் சந்தை முதலீடுகள் அதிக அளவு இலாபத்தைத் தருகின்றன என்பதும் நிச்சயமான உண்மை.

பயம், பீதி இவை பலவீனத்தின் அறிகுறி,



**பெரி. முத்துராமன்**

திட்டமின்றி இருப்பதும், அவசரப்பட்டுச் செயல்படுவதும் பயம், பீதிக்கான காரணங்களில் அடங்கும்.

முதலீடுகள் மற்றும் சேமிப்புக்களில் அனுபவம் இல்லாதவர்கள் தக்க நிதி ஆலோசகரின் உதவியுடன் நீண்ட காலத்திட்டம் ஒன்றைத் தயாரித்து அதன்படி சேமிக்க ஆரம்பிக்கலாம்.



இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ள ஸ்கோஷியா வங்கி தொலைபேசி எண் 416.439.3040. Ext 2010

# இலங்கை - நீதியான சமாதானத்திற்கான நகர்வுகள்

இலங்கையில் கடந்த பல சகாப்தங்களாக நிகழும் கொடிய போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு இலங்கையில் மட்டுமல்லாது, உலகத்தின் பலபாகங்களில் இருந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இலங்கையில் சமாதானத்தையும், அனைத்து மக்களுக்கும் நீதியான அரசியல் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று பல நாடுகளும், பல நாட்டு மனித உரிமையாளர்கள், அரசியல் வாதிகள் வெகு கரிசனையோடு உள்ளனர். அத்தோடு இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்களும் இதில் ஆர்வமாக செயல்பட்டு வருவது அதி-கரித்து வருகின்றது.

இலங்கையில் நிகழுகின்ற மனித உரிமைமீறல்கள் தொடர்பாகவும், சிறுபான்மை இனங்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பாகவும் ஐ.நா.வும் மிகுந்த அவதானத்துடன் கண்காணிக்கத் தொடங்கி யுள்ளது. இது தொடர்பாக பல பிரதிநிதிகள் இலங்கைக்கு சென்று வந்துள்ளனர். இருந்த போதும் சர்வதேசத்தை திருப்திப் படுத்தும் வகையில் இலங்கை அரசு இன்று வரை எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

**- திலீப் -**

இந்நிலையில் கனடாவில் இருந்து இலங்கை சமாதான முயற்சிக்காக "சமாதானத்திற்கான கனேடியர்கள்" என்ற அமைப்பு செயல்பட்டு வருகின்றது. இந்த அமைப்பில் தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள், மற்றும் முஸ்லீம்களும் அங்கம் வகிக்கின்றனர். எந்த கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும் ஆதரவு இல்லாமல் சுயாதீனமாக இலங்கையில் நீதியான சமாதானம் ஏற்படுவதற்கான இந்த "சமாதானத்திற் கான கனேடியர்கள்" அமைப்பு செயல்படுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினையில் மிக்க ஆர்வமும், இலங்கை அரசு தனது சிறுபான்மை இனங்களுடன் தனது அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் மிக ஆணித்தரமாக தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற கனேடிய அரச-'யல் வாதியான பொப் ரே இந்த "சமாதானத்திற்கான கனேடியர்கள்" கடந்த நவம்பரில் ஏற்பாடு செய்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். ஒன்ராரியோவின் முன்னைநாள் முதல்வரும், தற்போதைய கனடா லிபரல் கட்சியின் முக்கியஸ்தருமாவர்.

"சமாதானத்திற்கான கனேடியர்கள்" அமைப்பின் அடுத்த கூட்டம் ஏப்பிரல் மாதம் ஆறாம் திகதி, ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு Scarborough Village (மார்க்கம் - கிங்சன் சந்தியில்) நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சுவீடன் நாட்டில் இருந்து, இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என்றும் மிக நீண்டகாலமாகவும், மிக ஆர்வமாகவும் செயல்பட்டு வருகின்ற Camilla Orjela Ph.D. அவர்கள் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார். இவர் தற்போது சுவீடன் நாட்டு Goteborg University இல் Peace and Research துறையில் பணியாற்றி வருகின்றார்.

இலங்கைக்கு இதுவரை பதினைந்து தடவைகள் இவர் சென்றுள்ளார். இலங்கையின் பல பகுதிகளுக்கும் சென்று தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் எல்லாரையும் சந்தித்து உரையாடியுள்ளார். அது மட்டுமல்ல இலங்கை அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள், மற்றும்



புலிகள் தரப்பில் தமிழ்செல்வன், புலித்தேவனையும் சந்தித்து இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக இவர் உரை யாடியுள்ளார். இவருடைய கலாநிதி பட்டத்திற்காக இவர் எழுதியதே இலங்கைப்பிரச்சினையைப் பற்றித்தான் என்றால் இலங்கை விடயத்தில் எவ்வளவுக்கு இவர் ஆர்வமான உள்ளார் என்பது தெரியும்.

Camilla Orjela ஒரு பத்திரிகையாளரும் கூட. இவர் Utblick என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். இந்த சஞ்சிகை IOGT-NTO's International Institute ஆல் வெளியிடப்படுகின்றது. இந்த சஞ்சிகையின் முக்கிய நோக்கம் சமாதானமும் - முன்னேற்றமும் ஆகும் (Peace - and Development issues). அதே சமயம் இவர் SASNET's board உறுப்பினராக ஜனவரி 2004 ஆம் ஆண்டில் இருந்து அங்கம் வகிக்கின்றார்.

கனடாவில் வாழும் இலங்கையர்களை சந்திக்கும் நோக்கமாக வந்துள்ள கலாநிதி Camilla Orjela அவர்கள் "இலங்கை இனப்பிரச்சனையும் சர்வதேசத்தின் கடமைகளும்" என்பது பற்றி பேசுவார்.

அத்தோடு இந்த நிகழ்வில் ரொரன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி Kanishka Goonewardena Ph.D. அவர்களும் கலந்து கொண்டு இனப்பிரச்சனை தொடர்பாக பேசுகின்றார். சிங்கள இனத்தை சேர்ந்தவரான கனிஸ்க இலங்கை இனப்பிரச்சனையில் நீதியான தீர்வு சிறுபான்மை இனங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி நீண்டகாலமாக செயல்பட்டு வருகின்றார். இனப்பிரச்சினை தொடர்பாகவும், மனித உரிமைகள் தொடர்பாகவும், பல கட்டுரைகளை இவர் ஆங்கிலத்தில் எழுதி அவை சர்வதேச ரீதியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**ELECTRICAL WORKS**



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - **416-286-2880**

# பசுமை கலந்த இனிய நாள் புனித பற்றிக் தினம்

## St. Patrick day (March 17)
## புனித பற்றிக் நாள் (மார்ச் 17)

அயர்லாந்து போதகரனா இவரது தினம் எங்கெங்கு ஐரிஷ் மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் விழாவாக மலர்கிறது. இவ்விழா கனடாவிலும் கொண்டாப்படுகின்றது.

அன்றைய தினம் மாணவ, மாணவியர், ஆசிரியர், அலுவலகர், வர்த்தக நிலையத்தினர் அனைவரும் பச்சை நிறத்தில் உடையணிவர். பச்சை நிறத்தில் இனிப்பு வகைகள், கானேஷன் பூ, பச்சைக் கொடிகள், ஷாம்றொக் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. அயர்லாந்துப் போதகரானாலும் கிறிஸ்தவ அப்போதகர் என்ற காரணத்தினால் உலகெங்கும் இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

புனித பற்றிக் அடிகளார் 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். றோமாபுரியைச் சேர்ந்த தந்தைக்கும் பிரான்ஸைச் சேர்ந்த தாய்க்கும் ஸ்கொட்லாந்தில் பிறந்தவர். தந்தை ஒரு நீதிபதியாக இருந்தவர். ஒரு றோமன் பிரசைக்குத் தேவையான அறிவைத் தந்தையிடமிருந்தும், பிரபுத்துவ அரச சபைக்குரிய பழக்க வழக்கங்களைத் தாயிடமிருந்தும் கற்றுக்கொண்டார்.

இவருக்குப் பதினாறு வயதாகும் போது ஒரு நாள் வீட்டின் முன்னால் நெருப்பு மூட்டிக் குளிர் காயந்து கொண்டிருக்கும் வேளையில் கடற்கொள்ளைக்காரர் புகுந்து அடித்து நொருக்கிக் கொள்ளையடித்து விலை போவதற்கு நல்ல பதம் என இவரைப் பிடித்துச் சென்று விட்டனர். அயர்லாந்தில் விலைப்பட்டுப் பன்றி மேய்க்கும் துன்பத்துக்கு ஆளானார். மலை மீதும், புல் வெளியிலும், பனியிலும், குளிரிலும் வருந்தி அடிமையாக ஆறு வருடங்களைக் கழித்தார்.

இந்த நாட்களில் தாயார் சொல்லிக் கொடுத்தபோது வெறுப்புடன் கற்ற வேதப்பாடல்களே அவருக்குத் தஞ்சமாயின. பாடிப்பாடிப் பொருள் பதிந்த அர்த்தங்களைப் புரிந்து கொண்டார். அயர்லாந்து மக்களின் மொழியையும், பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொண்டார். மலைமேல் இருந்த ஷாம்றொக் செடியின் கூர்க் காம்புடன் கூடிய மூன்று இலைகளை புனித திரித்துவமாகக் கற்றுக் கொண்டார். சர்வேஸ்வரன், சுதன், பரிசுத்த ஆவி என அதைத் தேவ சின்னமாகக் கருதிப் பிற்காலத்தில் மக்களிடையே பிரசாரம் செய்தார்.

ஒரு நாள் கப்பல் வருவதாகக் கனவு கண்டு கடற்கரை சென்றார். அங்கே ஒரு கப்பலை கண்டு அதில் தன்னை கூட்டிச்செல்லுமாறும் அதற்குரிய பணத்தை தான் கப்பலில் வேலை செய்து தருவதாகவும் கூறி அதில் ஏறி அடிமை வாழ்வினின்றும் தப்பித்துக் கொண்டார். கப்பலிலுள்ளவர்கள் காட்டுக்கரைகளில் ஒதுங்கியும், உணவின்றியும் வருந்தினர். இவர் இறைவழிபாடு செய்வதைக் கண்டு, உனது இறைவனிடமிருந்து உணவு வரவழை பார்க்கலாம்' என்றனர். அப்போது பன்றிக் கூட்டம் ஒன்று இவர்கள் கண்ணில் படும்படியாக ஓடிற்று. அவற்றை வேட்டையாடித் தமக்குப் பல நாட்களுக்கான உணவைத் தயாரித்துக் கொண்டனர். மகிழ்வோடு தாய் தந்தையரின் ஊரில் இறக்கி விட்டுச் சென்றனர்.

இவர் ஐரோப்பாவின் பல இடங்களுக்கும் சென்று மதம் பரப்பத் தேவையான கல்வியைப் பூரணமாகப் பெற்று மீண்டும் மதம் பரப்புவதற்காக அயர்லாந்துக்குச் சென்றார். அவர் இறங்கிய இடத்தில் சூரியனை வணங்குபவர்கள் இருந்தனர். அன்று ஒருவிழா நாள். அரசன் வந்து மலையின் மேலுள்ள விளக்கை ஏற்றும் வரை ஊரில் எவரும் விளக்கை ஏற்றக் கூடாது. இருள் சூழ்ந்திருந்த கிராமத்தைக் கண்டு புனித பற்றிக் அவர்கள் மலை மீது ஏறி விளக்கை ஏற்றி வைத்தார். அதனால் அரசனின் கோபத்துக்கு ஆளானார். ஆனால் அற்புதங்கள் பல நிகழ்ந்ததைக் கண்டு அரசனும் குடிமக்களும் மதம் மாறினர்.

இன்னொரு பிரதேசத்தில் பாம்பு வணக்கம் நடைபெற்று வந்தது. அதனால் அங்கே பாம்புகள் கொல்லப்படாமையால் நாடு முழுவதும் பாம்புகள் நிறைந்து காணப்பட்டன. இந்த மூட நம்பிக்கையை ஒழிக்க வேண்டி ஒரு மேளகாரனுடன் புனித பற்றிக் சென்றார். அவன் தப்பறையை அடிக்க அடிக்க பாம்புகள் எல்லாம் இடி கேட்ட நாகம் போல அலமந்து ஓடிக் கடலுள் வீழ்ந்தன. இன்றுவரை அயர்லாந்தில் ஒரு பாம்பு கூட இல்லையென்று கூறுகிறார்கள்.

புனித பற்றிக் குருவாகவும் பிஷப்பாகவும் அங்கே இருந்த காலத்தில் நூற்றுக் கணக்கான ஆலயங்களையும் பாடசாலைகளையும் கட்டுவித்தார். ஷாம்றொக்கின் காம்புகளுடன் கூடிய இலையே இன்றும் தேசியக் கொடியில் பொறிக்கப்பட்டுள்ளது. பச்சைப் பசேலென மரகதக் கல்லாக ஒளிவீசி நிற்கும் அயர்லாந்தை அது நினைவூட்டி நிற்கிறது.



**வள்ளிநாயகி இராமலிங்கம்**

# பிரபஞ்சத்தின் பருமன்

## பிரபஞ்சம் - 12

சென்றதடவை ஒரு வானியல் அலகு பருமன்வரை பிரபஞ்சத்தின் பருமனை கண்டுவிட்டோம். பூமிக்கும் கதிரவனுக்கும் இடைப்பட்ட தூரம்தான் ஒரு வானியல் அலகு என்பது இப்போது உங்களுக்குத் தெரியும், அல்லவா? எமது கதிரவத் தொகுதியின் பருமனைப் பார்த்தால், அதாவது கதிரவனின் ஒன்பது கோள்களையும் (புளூட்டோ உட்பட) அடக்கிய பகுதியின் பருமனைப் பார்ப்போமாயின் அது 30, 40 வானியல் அலகு தூரம்வரை பரந்திருக்கும். இந்தப் பருமனில் எமது 12,756 கிலோமீற்றர்கள் விட்டமான பூமி ஒரு புள்ளியினைப் போலக் காணப்படும். இனித்தான் கொஞ்சம் வில்லங்கமான விவகாரங்கள் வரும்.

எமது கதிரவனை மையப்படுத்தி 10,000 வானியல் அலகு விட்டமான பகுதியினைப் பார்ப்போமாயின், எமது பூமி முற்றாகவே பார்வையில் இருந்து மறைந்துவிடும். நமது சூரியன் மட்டுமே தனியே ஒரு ஒளிப்பொட்டுப் போலத் தென்படும். வேறு என்னெல்லாம் தெரியும்? ஒன்றுமே தெரியது. வெறும் கருமையாகக் காணப்படும், இந்தப் பிரபஞ்சப் பகுதி. ஏனெனில் அப்பிரதேசத் தில் ஒன்றுமேயில்லை. விண்மீன்களில் ஒன்று கூட இப்பகுதியில் தென்படாது. கற்பனை செய்து பார்க்கவே முடியவில்லை யல்லவா? ஆம், ஆனால் அதுதான் உண்மை. கதிரவன் குடும்பத்திற்கு அப்பால் பெரும்பகுதி வெறுமையாகவே காணப்படுகின்றது. சரி எதுவரை இந்த வெறுமை செல்கின்றது எனப்பார்ப்போமே. அதற்காக கதிரவனில் இருந்து ஒரு மில்லியன் AU விட்டமுடைய பகுதியை இப்போது விரிவுபடுத்திப் பார்ப்போம்.

கதிரவனில் இருந்து 1,000,000 வானியல் அலகு விட்டமுடைய பகுதி. ஒரு கணக்கிற்கு கிலோ மீற்றரில் பார்த்தோமேயாயின் 1.47 x $10^8$ x$10^6$ கிலோமீற்றர், 1.47 x 100000000 x 1000000 கிலோமீற்றர். இதனை எப்படித்தான் அளந்து முடிப்பது, அளந்து முடித்தார்கள்? பிரமிப்பாகவுள்ளதல்லவா! இவ்வளவு பிரமாண்டமான பிரபஞ்சப் பகுதியினுள் ஒரு பத்தோ அல்லது பதினைந்தோ விண்மீன்கள் தான் காண்படும். அதுசரி பிரபஞ்சத்தில் உள்ள விண்மீன்கள் எவ்வளவு! ஆயின் பிரபஞ்சத்தின் பருமனை வானியல் அலகின் அளவிற்கூட கூறமுடியாது போலல்லவா இருக்கின்றது எனக் கேட்கின்றீர்களா? அதற்கு வானவியலாளர்கள் இன்னொரு அலகுத்திட்டத்தினை, பெரிய தூரங்களை அளப்பதற்கு பாவிக்கின்றார்கள். அதனைப்பற்றிப் பார்ப்போம்.

ஒளியானது மிகவேகமாகச் செல்லும் ஒன்று. ஒரு செக்கனில் ஒளியானது 3 இலட்சம் கிலோமீற்றரை கடந்து செல்லும். இந்த ஒளியின் வேகத்தினால் ஆன தூர அடிப்படையையே வானவியலாளர்கள் பெரும் தூரங்களை அளக்கப் பாவிக்கின்றார்கள். ஒளி ஒரு வருடத்தில் எவ்வளவு தூரத்தை கடந்து செல்லுமோ, அத்தூரத்தினை ஒரு நியமமா, அளவாகப் பாவித்து அதன் அடிப்படையில் தூரங்களை விளக்குகின்றார்கள். ஒரு வருடத்தில் ஒளியானது கடந்து செல்லும் தூரத்தினை ஓர் 'ஒளி ஒளியாண்டு' என்ற அலகினால் குறிப்பிடுகின்றார்கள். இந்த ஒளியாண்டு என்பது அண்ணளவாக $10^{13}$ கிலோமீற்றருக்கு அல்லது 63,000 வானியல் அலகு தூரத்திற்குச் சமன்.

எமது கதிரவனுக்கு மிகவும் கிட்டவாக இருக்கும் விண்மீன் 'புரோக்சிமா சென்சரி' (Proxima Centauri) ஆகும். இந்த விண்மீன் எமது பூமியில் இருந்து 4.2 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. 4.2 ஒளியாண்டுகள் என்றால் எவ்வளவு கிலோமீற்றர் எனக் கேட்கின்றீர்களா? வேண்டாம், விட்டுவிடுவோம். இவ்வளவு பெரிய தூரத்தைப் பற்றி எல்லாம் கதைக்க, சிந்திக்க தொடங்கிவிட்டோம். இவற்றை எல்லாம் கிலோமீற்றர் கணக்கில் சிந்திக்கவே கூடாது. ஒளியாண்டு களாகவே, வானவியலாளர்கள் போல் கணக்கிடுவோம், கவனிப்போம், சரிதான்! ஒரு மில்லியன் வானியல் அலகு தூரம் என்பது கிட்டத்தட்ட 17 ஒளியாண்டுகள் தூரமாகும். இவ்வளவு பருமனை பிரபஞ்சத்தின் பகுதியில் பத்தோ அல்லது பதினைந்து விண்மீன்கள் தான் அதாவது நட்சத்திரங்கள் தான் காணப்படும். ஏனைய பெரும்பகுதி வெறுமையாகத்தான் காணப்படுகின்றது. இடையிடையே சில வாயுக்களும் தூசுகளும் காணப்பட்டாலும் அவை கண்களுக்கும் தென்படாது, கருத்தினும் கொள்ள முடியாது.

இன ஒரு 2000 ஒளியாண்டுகள் பருமனுக்கு எமது பிரபஞ்சம் பார்வையை விரிவுபடுத்திப் பார்ப்போமா! இப்பொழுது இப்பிரதேசத்தில் பல்லாயிரக்கணக்கில் விண்மீன்கள் தெரியும். பெரியதும் சிறியதுமாய் ஒளிர்விடும் இந்த விண்மீன் கூட்டத்தினுள் எமது கதிரவன் எங்கேயோ தொலைந்து போய்விடும். மிகமிகப் பெரியதாக நாம் எண்ணும் எமது விண்மீனான கதிரவனே இப்போ எங்கே என்று கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஒப்பீட்டளவில் அத்தனை சிறியதாகிவிட்டது. இவ்வளவுடன் பிரபஞ்சத்தின் பருமன் நின்றுவிடவில்லை. இன்னமும் விரிவுபடுத்தப்படக் கூடியதுதான் எமது பிரபஞ்சம். அதனை அடுத்தமுறை பார்ப்போமே!



**- கனி -**


# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# மகிழ்ச்சி ஒரு வேதியியல்

மனிதத்தன்மையின் வளர்ச்சி, சக்தி மேல் நோக்கி நகர்தலை அடிப்படையாகக் கொண்டது. ஆத்ம சாதனைகள் எல்லாமே அதற்காகத்தான். அந்த நோக்கத்தில் மஹாசிவராத்திரி நாளை முழுமையாய் பயன்படுத்திக் கொள்ளுங்கள். - சத்குரு

திருப்தி என்றால் என்ன? மகிழ்ச்சி என்றால் என்ன? இதைப் புரிந்து கொள்வதற்குப் பற்பல வழிகள் உள்ளன. ஓர் எளிமையான வழி என்னவென்றால் இப்போது உங்கள் அமைதியை நீங்கள் இழந்து விட்டதாக வைத்துக் கொள்வோம். உங்கள் அமைதியை நீங்கள் இழந்துவிட்டால், நீங்கள் முதலில் உங்கள் கணவருடனோ அல்லது மனைவியுடனோ சண்டை போடத் துவங்குவீர்கள். மெதுவாக பக்கத்தில் இருப்பவரோடு சண்டை போடுவீர்கள். அடுத்தது உங்கள் முதலாளியோடு சண்டை போடத் துவங்குவீர்கள். உங்கள் முதலாளியோடு நீங்கள் சண்டை போடும்போது, நீங்கள் ஒரு டாக்டரைப் பார்க்கவேண்டிய நேரம் வந்துவிட்டது என அனவரும் புரிந்கொள்கின்றனர் இல்லையா?
டாக்டரைப் போய் பார்க்கிறீர்கள். அவரும் மாத்திரை கொடுக்கிறார். அந்த மாத்திரையை சாப்பிட்டவுடன் அமைதியாகி விடுகிறீர்கள். சிறிது காலத்திற்கு வேண்டுமானால் அந்த அமைதி இருக்கலாம், ஆனால் நீங்கள் அமைதி யாகி விடுகிறீர்கள், இல்லையா? இந்த மாத்திரை என்பது என்ன? அது ஒரு சிறிய இரசாயனத் துண்டு. அந்த இரசாயனத்தை விழுங்கியவுடன் உடல் அளவிலும் மன அளவிலும் அமைதியாகி விடுகிறீர்கள். இதை வேறு விதமாகச் சொல்வதென்றால், நீங்கள் அமைதி என்று எதை அழைக்கிறீர்களோ அது ஒரு குறிப்பிட்ட வகை இரசாயனம்தான். மகிழ்ச்சி என நீங்கள் அழைப்பதும் வேறு வகை ஒரு இரசாயனம்தான். துன்பம் என்று நீங்கள் அழைப்பதும் இன்னொரு வகை இரசாயனம்தான். பதட்டம், அழுத்தம், கவலை, பயம், கிளர்ச்சி இவையெல்லாம் வேறொரு வகையான இரசாயனம். ஒவ்வொரு மனித அனுபவத்திற்கும் பின்னால் ஒரு இரசாயன அடிப்படை உள்ளது, இல்லையா?

சத்குருவால் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியையால் எதிர்வரும் June மாதம் 11 - 17 ஆம் திகதி வரை யோகா வகுப்புக்கள் நடைபெறவுள்ளது.
ரொறொன்ரோவில் தொடர்புகளுக்கு:
416.300.3010
website: www.ishafoundation.org or www.ishayoga.org

சரியான வகை இரசாயனத்தை எப்படி உருவாக்குவது என இப்போது பார்க்கப் போகிறோம். சரியான இரசாயனத்தை நீங்கள் கொண்டிருந்தால் அமைதியும் மகிழ்ச்சியும் உங்களுக்கு இயல்பாகவே இருக்கும். அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது வாழ்வின் முடிவல்ல, வாழ்வின் தொடக்கம். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இல்லையென்றால் இன்னும் நீங்கள் வாழத் துவங்கவில்லை என்றே அர்த்தம். அமைதியாகக் கூட இல்லையென்றால் இன்னமும் நீங்கள் வாழ்க்கையைத் துவக்கவே இல்லை என்றுதான் அர்த்தம். நீங்கள் முட்டாள்தனமான மனதில் சிக்கிப் போயிருக்கிறீர்கள் இன்னும் வாழ்வை ஆரம்பிக்கவே இல்லை. எனவே அமைதி யாக இருப்பதும், மகிழ்ச்சியாக இருப்பதும் வாழ்வின் இறுதி அம்சம் அல்ல, அது ஒரு அடிப்படைத் தேவை. உங்களால் அமைதி யாகக் கூட இருக்க முடியவில்லை என்றால் உங்கள் வாழ்க்கையில் வேறு என்னதான் செய்யப் போகிறீர்கள்? ஆனால் தற்போது வாழ்க்கையின் உயர்ந்த பரி- மாணமாக மக்கள் மன அமைதியைத்தான் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்றால் உண்மையாகவே உங்களால் எதுவும் செய்யமுடியாது, இல்லையா? நீங்கள் மன அமதியுடன் இருக்க முடியவில்லை


சத்குரு ஜக்கி வாசுதேவ்

என்றால் உங்களால் அமைதியாக ஓரிடத்தில் உட்கார முடியாது, மகிழ்ச்சி யாக சாலையில் நடக்கமுடியாது, உங்கள் வாகனத்தை அனுபவித்து ஓட்ட முடியாது.

எனவே உங்களுக்குள் சரியான இரசாயனத்தை உருவாக்குவது மிகவும் முக்கியமானது. எப்படி வெளிநன்மைக்காக ஒரு விஞ்ஞானம் உள்ளதோ, அப்படியே உள்நலத்திற்காகவும் ஒரு விஞ்ஞானம் உள்ளது. மிக நீண்ட நாட்களாக அந்த விஞ்ஞானம் கவனிக்கப் படாமல் உள்ளது. வெளிப்புற விஞ்ஞானம் உங்களுக்கு நிம்மதியையும் வசதியையும் தரமுடியும், ஆனால் அந்த நிம்மதியும் வசதியும் உங்கள் வாழ்க்கையில் எந்த வழியிலும் மாற்றத்தை எடுத்துவராது என்பதை தயவுசெய்து பாருங்கள்.

# முதுகு வலியும் முதுகெலும்பு தேய்வு நோயும் நிரந்தர தீர்வு யோகா மருத்துவம்

## நீண்டநாள் வாழ - நினைத்ததை அடைய - (பாகம் - 16)

நமது முதுகெலும்புக்கூடு பல எலும்புகள் சங்கிலிபோல் இணையும் ஓர் எலும்புத் தொகுதியாகும். மனிதன் நடமாடும் போது எலும்புகள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து தேயாமல் தடுப்பதற்கு எலும்புகளின் இடையில் இணைப்பு மையங்கள் இருக்கின்றன. இந்த இணைப்புப் பகுதி மையங்கள் ஆண், பெண் இருபாலாருக்கும் நாற்பது வயதை அண்மிக்கும் போது தேய்வு ஏற்படத் தொடங்குகிறது. இந்த நிலை பொதுவாக ஹார்மோன் மற்றும் கல்சியம் குறைபாட்டினால் ஏற்படுகிறது. இதனால் கழுத்துவலி, முதுகுவலி என்பன ஏற்படுவது இப்போது அதிகமாகி வருகிறது.

சிலருக்கு தோள்பட்டையிலிருந்து கைவிரல் நுனிவரை மரத்துப் போய்விடும். இது அடிக்கடி அல்லது விட்டுவிட்டு ஏற்படும். இதை இருதய நோய் என்று நினைப்பார்கள். ஆனால் உண்மையில் இது முதுகுதண்டில் ஏற்படும் குறைபாட்டின் அறிகுறியே. இது பல மருத்துவ பரிசோதனையின் பின்புதான் உணர்வார்கள். கல்சியம் குறைபாட்டிற்காக அச்சத்து அடங்கிய மாத்திரைகளை அதிகமாகி உட்கொள்வது தவறு. காரணம் அதிகமான கல்சியம் இதயத்தை இணைக்கும் இரத்தக் குழாய்களைத் தடிக்கச் செய்கிறது. அதனால் இருதய நோய்கள் தோன்ற வாய்ப்பு அதிகமாகின்றது. இது மருத்துவ ஆராய்ச்சியின் முடிவாகும்.

சிலருக்கு திடீரென்று நிமிர்ந்தாலோ அல்லது தலையைத் திருப்பினாலோ தலைசுற்றுதல் ஏற்படும், உடல் வியர்த்துப்போகும், தோள்பட்டை மரத்துப்போகும். இதற்கெல்லாம் மூலகாரணம் இந்த குறைபாடுதான். இவற்றை நிவர்த்தி செய்ய சில குறைகளை தவிர்க்க வேண்டும். அவைகளில் முக்கியமானவை

1. உட்காரும்போது குனிந்தோ, கவிழ்ந்தோ உட்காரக்கூடாது.
2. பொருட்களைத் தூக்கும் போது வேலையின் பெரும் பகுதியை கால்கள் செய்யும்படி இருக்கவேண்டும். இடுப்பின் மேற்புறத்தை அதிகமாக வளைக்கக் கூடாது.
3. உயர்ந்த குதிக்காலுள்ள பாதணிகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும்.
4. அளவிற்கு மீறிய உடல்எடை முதுகுக்கு அதிக சுமையைத் தரும். எனவே உடல் எடையைச் சீராக வைத்திருக்க வேண்டும்.
5. மலச்சிக்கல் வராது பாதுகாக்கவும்.
6. வாழைக்காய், வாழைப்பழம், தயிர், ஊறுகாய் போன்ற வாதத்தை ஏற்படுத்தும் உணவுகளைக் குறைத்து உண்ணவேண்டும்.
7. தொலைக்காட்சி பார்க்கும்போது சாய்ந்து கொண்டோ அல்லது படுத்துக்கொண்டோ மணிக்கணக்கில் பார்ப்பதை தவிர்த்து நேராக அமர்ந்து பார்க்கவேண்டும்.

முதுகு மற்றும் முள்ளந்தண்டு நோய்களுக்கும் வலிகளுக்கும் யோகா மருத்துவத்தில் நிரந்தர தீர்வுகள் நிச்சயமாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி முதுகுத்தண்டு தேய்வு ஏற்படுவதை தடுத்து நிறுத்த கூடிய சக்தி யோகாசனத்தில் 'சலபாசனம்' என்ற ஓர் ஆசன நிலைக்கு மட்டும்தான் உண்டு. இது எளிதாக எவராலும் பழகக் கூடியது.

**சலபாசனம் செய்வதால் ஏற்படும் பலன்கள்**

1. நீரிழிவு நோய்க்கு அதிக பலனைத் தருகிறது.
2. ஆஸ்துமா (Asthma) நோயைக் கட்டுப்படுத்துகிறது.


சலபாசனம்

3. அடி முதுகு வலியைக் போக்குகிறது.
4. முதுகுத் தண்டையும் அதன் 33 இணைப்புகளையும் பலம் பெறச் செய்கிறது.
5. பகலில் தூக்கம் வருவதைத் தடுக்கிறது.
6 மூத்திரக் கடுப்பு நோயைப் போக்குகிறது.
7. இந்த ஆசனத்தைத் தொடர்ந்து செய்து வந்தால் எதையும் சாதிக்கும் வலிமையும், வாழ்வில் சகல புகழும் வந்து சேரும் என்று பழைய யோக நூல்கள் கூறுகின்றன.

**புஜங்காசனம்** - இந்த ஆசனம் முதுகுத்தண்டை பின்புறமாக வளைத்து நிற்பதால் முதுகின் மேல்பகுதி நடுப்பகுதி என்பவற்றிலிருந்த இனம்புரியாத வலிகள் மறைந்து போகின்றன.

**பட்ஸி மொத்தாசனம்** - இந்த ஆசனம் கால்கள் இரண்டும் நீட்டியபடி தலையை முன்புறமாக வளைத்து நெற்றிப்பகுதியை முழங்காலைத் தொடும்படி செய்வதால் கழுத்துப் பகுதியிலிருந்து அடிமுதுகுவரையுள்ள முதுகுத்தண்டும் அதன் இணைப்புகள் அனைத்தும் நன்றாக இழுக்கப்படுவதால் சகலவிதமான முதுகு வலிகளும் (Back Pain) முடிவுக்கு வருகின்றது.


பட்ஸி மொத்தாசனம்

**விபரீத கரணி** - முதுகுத் தண்டு தேய்வு நோய்களுக்கு முக்கிய காரணம் கல்சியம் குறைபாடுதான் என்று முன்பே கூறியிருந்தோம். நாம் உண்ணும் உணவிலுள்ள கல்சியத்தை உடல் அதிக அளவில் உறிஞ்சி சகல நரம்பு மண்டலங்களுக்கும் அளிக்கக்கூடிய சக்தியை இந்த விபரீதகரணி ஆசனம் உடலுக்கு வழங்குகிறது.

எனவே மேற்குறிப்பிட்ட ஆசனங்களை ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் பழகிவரும் போது மேற்குறிப்பிட்ட முதுகுத்தண்டில் ஏற்படும் அனைத்துக் குறைபாடுகளிலிருந்தும் நிரந்தர நிவாரணம் கிடைப்பது உறுதி.



# உலகப் பணக்காரர்கள்

வருடா வருடம் போப்ஸ் (Forbes) சஞ்சிகை, உலகிலுள்ள மிகப்பெரிய பணக்காரர்களை வரிசைப்படுத்தி வெளியிடுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் உலக பில்லியெனர்களின் எண்ணிக்கை மிகவேகத்தில் அதிகரித்து வருவதனை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. கடந்த வருடத்தில் 946 ஆக இருந்த உலகின் அதிகூடிய பணக்காரர் களாக கவனிக்கப்படும், பில்லியனர்களின் எண்ணிக்கை இவ்வருடம் 1,125 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 13 வருடங்களாக உலக வரிசை யில் முதலாவது பணக்காரராக இருந்து வந்த பில் கேற்ஸ் (Bill Gates) இம்முறை முதல் தடவையாக 3வது இடத்திற்கு தரம் இறக்கப்பட்டுள்ளார். முதலாவது இடத்தில் இருக்கும் வோறன் பவ்வெற் (Warren Buffet) இன் பெறுமதி 62 பில்லியன் US$ ஆகும். மூன்றாவது இடத்தில் இருக்கும் பில் கேற்ஸ் இன் பெறுமதி 58 US$ ஆகும்.

**முதல் 10 பணக்காரர்களின் பெயர்கள்**

| Rank | Name | Networth | Country |
|---|---|---|---|
| 1 | Warren Buffet | 62 Billion | USA |
| 2 | Carlos Slim Helu | 60 Billion | Mexico |
| 3 | Bill Gates | 58 Billion | USA |
| 4 | Lakshmi Mittal | 45 Billion | UK/India |
| 5 | Mukesh Ambani | 43 Billion | India |
| 6 | Anil Ambani | 42 Billion | Indai |
| 7 | Ingvar Kamprad | 31Billion | Switzerland |
| 8 | KP Singh | 30 Billion | India |
| 9 | Oleg Deripaska | 28Billion | Ruissia |
| 10 | Karl Albret | 27 Billion | Germany |











வருடா வருடம் 37 இந்திய பில்லியனர்கள் இந்த பட்டியலில் இருந்த போதும், இவ்வருடம் (2008) 53 பில்லியெனர்களாக பட்டியலை அலங்கரித்துள்ளார்கள். உலகின் 1,125 பில்லியனர்களில் முதல் 10 வரிசையில் நாலு இந்திய பில்லியெனர்கள் இதில் அடங்குவர். மற்றும் SUN TV உரிமையாளரும் முரசொலி மாறனின் மகனான கலாநிதி மாறன் 349 இடத்தில் இடம்பெற்றுள்ளார்.

| Country #of Billion | 2008 | 2007 |
|---|---|---|
| USA | 469 | 371 |
| RUSSIA | 66 | 61 |
| INDIA | 53 | 37 |
| GERMANY | 59 | 55 |
| CHINA | 42 | 15 |
| JAPAN | 24 | 27 |
| BRASIL | 24 | 27 |
| CANADA | 22 | 46 |




# சொந்த மண்ணிலேயே கங்காருவை மடக்கியது இந்தியா!!

## விளையாட்டுத் தகவல்கள் 233

முத்தரப்பு தொடரில் இந்திய பேட்ஸ்மேன்கள் முழு ஆதிக்கம் செலுத்த, அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி அசத்தியது. காம்பிர், சச்சின், தோனி என மூன்று இந்திய வீரர்கள் எதிரணியின் பந்துவீச்சை சிதறடித்து, ரசிகர்களுக்கு உற்சாகவிருந்து அளித்தனர். பந்துவீச்சாளர்களும் தங்களது பங்களிப்பை சிறப்பாக செய்தார்கள்.

அவுஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு ஒருநாள் தொடரை இந்திய அணி முதன்முறையாக கோப்பையை கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது. இத்தொடரில் இந்திய பேட்மேன்கள் சூப்பர் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அசத்தலாக விளையாடிய காம்பிர் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தலா ஒரு சதம் கடந்தார். 10 போட்டியில் 2 சதம், ஒரு அரைசதம் உட்பட 440 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு பக்கபலமாக இருந்தார். அவுஸ்திரேலிய மண்ணில் அனுபவ வீரர்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்ற கருத்தை தகர்த்தெறிந்தார்.

**சச்சின் அசத்தல்** - அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தை மாஸ்டர் சச்சின் தட்டிச் சென்றுள்ளார். இத்தொடரில் 10 போட்டியில் 399 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன் காரணமாக ஐ.சி.சி தரவரிசையில் விறுவிறுவென முன்னேறி பலமாதங்களுக்கு பின்முதலிடத்தை கைப்பற்றியுள்ளார். இரண்டு இறுதியாட்டதில் கலக்கிய இவர் அணி கோப்பையை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார்.

**சிறந்த அணித்தலைவர்** - பொறுப்பான அணித்தலைவர் செயல்பட்ட தோனி அனைத்து போட்டிகளிலும் நன்றாக ஸ்கோர் செய்தார். முதல் இறுதியாட்டம் உள்ளிட்ட சில போட்டிகளில் அபாரதிறமையை வெளிப்படுத்திய ரோகித் தனது தேர்வை நியாயப்படுத்தியுள்ளார். உத்தப்பா, சிக்சர் யுவராஜ், சேவக் ஆகியோர் மட்டுமே பேட்டிங்கில் ஏமாற்றம் அளித்தனர்.

**பிரவீண் பிரமாதம்** - பந்துவீச்சை பொறுத்தவரை பிரவீண், இஷாந்த் புதிய நட்சத்திரங்களாக உருவெடுத்துள்ளனர். இஷாந்த 9 போட்டியில் 14 விக்கெட்டை கைப்பற்றி, அதிக விக்கெட் வீழ்சிக்கு காரண-மான இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமை பெற்றுள்ளார். 4 போட்டியில் மட்டுமே பங்கேற்ற பிரவீண் 10 விக்கெட்டுகளை சாய்த்து முத்திரை பதித்துள்ளார்.

**கில்கிறிஸ்ட் சோகம்** - தற்போது தொடர்ந்து இரண்டாவது முறையாக அவுஸ்திரேலிய முத்தரப்பு தொடரை இழந்துள்ளது. இவர்களின் தோல்விக்கு பேட்ஸ்மேன்களின் மோசமான ஆட்டமே காரணம். மைக்கேல் கிளார்க் ஹைடன், ஹசி ஓரளவு ஓட்டங்கள் சேர்த்துள்ளன் என்றாலும் இவர்களால் அணிக்கு வெற்றி தேடி தர முடியவில்லை.

**நெருக்கடிக்கு பணிந்தது** - பிராக்கன், பிரட்லீ அதிக விக்கெட் வீழ்த்தினாலும் இவர்களால் இறுதியில் இந்திய வீரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. ஒட்டுமொத்தத்தில் எதிரணிக்கு நெருக்கடி கொடுக்கும் அவுஸ்திரேலியா இம்முறை இந்தியாவின் நெருக்கடிக்கு பணிந்து விட்டது. மீண்டும் சர்ச்சையில் சைமண்ட்ஸ் அவுஸ்திரேலியாவின் சைமண்ட்ஸ் இன்னொரு சர்சையில் சிக்கியுள்ளார். 10வது ஓவரின் போது திடீரென 'ஆடையில்லாத ரசிகர்' ஒருவர் மைதானத்தில் அடாவடியாக புகுந்தார். அப்போது பேட் செய்து கொண்டிருந்த சைமண்ட்ஸ் ஆத்திரத்தில், அந்த ரசிகரை இடித்து கீழே தள்ளினார். சடாரென விழுந்த இவரை பாதுகாப்பு படையினர் வெளியேற்றினர். ஐ.சி.சி. நடத்தை விதிமுறை 4.2 இன் கீழ் எதிரணி வீரர்கள் மற்றும், அதிகாரிகள் அல்லது ரசிகர் ஒருவரை உடல் ரீதியாக தாக்குவது குற்றம். இதற்கு 5 ரெஸ்ற் அல்லது 10 ஒருநாள் போட்டி முதல் ஆயுள் தடைவரை விதிக்கலாம். சைமண்டஸ் செயல்பற்றி அம்பயர்கள் முறைப்படி புகார் செய்தால் தடையில் இருந்து தப்புவது கடினம்.

**பாண்டிங் ராஜினாமா?** - அவுஸ்திரேலிய மண்ணில் தோற்கும் போது அணித்தலைவர் தலைக்குத்தான் ஆபத்து. இதையடுத்து பாண்டிங்கிற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முத்தரப்பு தொடரில் இங்கிலாந் திடம் கோப்பையை கோட்டை விட்டார். இம் முறை இந்தியாவிடமும் தோல்வி அடைந்ததால், அணித்தலைவர் பதவியை தானாகவே ராஜனாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கில்கிறிஸ்ட் சோகம்** - தோல்வி சோகத்துடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக விடைபெற்றார். அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் ஏற்கனவே ரெஸ்ரில் இருந்து ஓய்வு பெற்ற இவர் ஒருநாள் போட்டிக்கும் 'குட்பை' சொன்னார். நேற்று இரண்டு ஓட்டங்களுக்கு வெளியேறி ஏமாற்றம் அளித்தார்.

**காம்பிர் முதலிடம்** - முத்தரப்பு தொடரில் அதிக ஓட்டம் எடுத்த வீரர் என்ற பெருமை பெறுகிறார் இந்தியவின் காம்பிர். இவர் 10 போட்டிகளில் 2சதம், 1 அரைசதம் உட்பட 440 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சச்சின் ஒருசதம் உட்பட 399 ஓட்டங்கள் எடுத்து இரண்டாம் இடத்தில் உள்ளார். அவுஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக கில்கிறிஸ்ட் 322 ஓட்டங்கள் (10 போட்டி) எடுத்துள்ளார்.

**சச்சின் நம்பர் 1** - முத்தரப்பு தொடரில் அபார-மாக ஆடிய சச்சின் தரநிலை பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். சச்சின் 91 ஓட்டங்களில் அவுட்டானதன் மூலம் அதிகமுறை (17முறை) 90 களில் அவுட்டான வீராகிறார்.

**23 ஆண்டுக்கு பிறகு....'டுவென்ரி 20'** - உலக கோப்பை வென்று சாதித்த தோனி தலைமையிலான அணி, உலகசாம்பியன் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி அசத்தியுள்ளது. அவுஸ்திரேலிய மண்ணில் 23 ஆண்டுக்கு பிறகு இந்திய அணி ஒருநாள் தொடரில் கோப்பை வென்றுள்ளது. இதற்கு முன் 1985 நடந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில் கோப்பை வென்றது. கடந்த 30 ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு தொடரின் இறுதியில் முதல்முறையாக கோப்பை வென்றுள்ளது.

ஏன் இவ்வளவு முக்கியத்துவம்? - முத்தரப்பு கோப்பை ஒன்றும் உலகக்கோப்பை அல்ல. ஆனாலும் இந்தியாவின் வெற்றி பற்றி இவ்வளவு பெரிய அளவில் பேசப்படுவதற்கு இம்முறை அரங்கேறிய சர்ச்சைகள் தான் முக்கிய காரணம். ஒவ்வொரு போட்டியின் போதும், அவுஸ்திரேலிய வீரர்கள் வீராப்பு பேசினார்கள். வீணாக இந்திய அணியை தூண்டிப் பார்த்தார்கள். சிட்னி ரெஸ்ற் போட்டியின் போது அம்பயர் ஸ்டீவ் பக்னர், பென்சன் உள்ளிட்டோர் இந்தியாவுக்கு எதிராக தீர்ப்பு அளித்தனர். பின்னர் ஹர்பஜன், சைமண்ட்சை பார்த்து 'குரங்கு' என கூறியதாக பிரச்சினை கிளப்பினர். இஷாந்த் சர்மா - சைமண்ட்ஸ் இடையே மோதல் வெடித்தது. ஹைடன் தன் பங்குக்கு ஹர்பஜனை 'பயனற்ற களைப்பயிர்' என்று விமர்சித்தார். கடந்த காலங்களில் இந்திய அணி தோல்வி அடைந்து வந்ததால், இது போன்ற சர்ச்சைகள் பெரிதாகவில்லை. ஆனால் இம்முறை 'நெருப்புக்கு நெருப்பு' என்ற வகையில் அவுஸ்திரேலியாவின் ஒவ்வொரு அசைவுக்கும் சரியான பதிலடி கொடுத்தது. பேர்த் ரெஸ்ரில் வென்ற கையோடு முத்தரப்பு தொடரிலும் அசத்தியது. காம்பிர், இஷாந்த், பிரவீண் போன்ற இளம் வீரர்களோடு சச்சினும் அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்த, அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி காட்டியுள்ளது. இதன்மூலம் ரெஸ்ற் தொடர் தோல்வி, 2003 உலக கோப்பை தோல்விக்கு பழி தீர்த்துள்ளது. அடுத்த உலகின் 'நம்பர் - 1 அணி' என்ற இலக்கை நோக்கி விரைவாக முன்னேறுகிறது. அவுஸ்திரேலியா இன்னொரு வெஸ்ட் இண்டீசாக உருவெடுக்கும் அபாயத்தில் உள்ளது.

## உதைபந்தாட்டம்

**காயத்தால் ரொனால்டோ விரைவில் ஓய்வு?**

இத்தாலியில் நடந்த கால்பந்து போட்டியின் போது காயமடைந்த பிரேசில் நட்சத்திர வீரர் ரொனால்டோ ஓய்வு பெறும் வாய்ப்பு அதிகமுள்ளதாக தெரிகிறது.

பிரேசில் அணியின் நட்சத்திர கால்பந்து வீரர் ரொனால்டோ இவர் மூன்றுமுறை "பிபா" சிறந்த கால்பந்து வீரருக்கான விருது வென்றுள்ளார். 1994 மற்றும் 2002 இல் அணி உலக கோப்பை வெல்ல முக்கிய காரணமாக இருந்தவர். இவர் தற்போது ஏ.சி மிலன் கிளப் அணிக்காக இத்தாலியில் நடக்கும் சீரி 'ஏ' கால்பந்து தொடரில் விளையாடி வருகிறார். கடந்த மாதம் நடந்த லிவர்னோ அணிக்கு எதிரான போட்டியின் போது திடீரென லிவர்னோ அணியின் ஜோஸ் விடிகலுடன் மோதி கொண்டார். இதில் காயமடைந்த ரொனால்டோ உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 'எக்ஸ் - ரே' யில் அவரது வலது முழங்கால் தசைநார் கிழிந்துள்ளது தெரியவந்தது. இதே போல் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன் இவருக்கு காயம் ஏற்பட்டது. அதிலிருந்து குணமடைய சில மாதங்களாகும் என கூறப்பட்டாலும் அவர் 100 சதவீத உடற்தகுதியுடன் களமிறங்க மூன்று ஆண்டுகள் ஆனது.




இந்நிலையில் அவருக்கு நேற்று உடனடியாக 'அறுவை சிகிச்சை' செய்யப்பட்டது. தற்போது 31 வயதான இவர் முழுமையாக குணமடைய குறைந்தது 9மாதம் தேவைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இவர் விரைவில் ஓய்வு பெறக்கூடும் என ஏ.சி.மிலன் அணியின் அதிகாரபூர்வ வெப்சைட் தெரிவித்துள்ளது. அதில், 'ரொனால்டோவின் காயம் குணமடைய 9 மாதங்களுக்கு மேலாகும். இக் காயம் அவரது கால்பந்து வாழ்க்கையை முடித்துவிடக்கூடிய வாய்ப்பும் உள்ளது' என்கிறது.

ரொனால்டோவின் காயம் குறித்து ஏ.சி.மிலன் அணியின் பயிற்சியாளர் கார்லோ அன்சிலாடி அளித்த பேட்டி "ரொனால்டோவின் காயம் வருத்தம் அளிக்கிறது. அவரால் தொடர்ந்து விளையாட முடியுமா என்ற கவலை எங்களை வாட்டுகிறது. அவரது கால்பந்து வாழ்க்கை முடிந்து விட்டது என்று என்னால் கூற முடியவில்லை. காலம் தான் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லும் நாங்கள் எப்போதும் அவருக்கு ஆதரவாக இருப்போம். அவர் விரைவில் குணமடைய வேண்டும் என விரும்புகிறோம். போட்டி முடிந்தவுடன் எங்கள் அணியின் அனைத்து வீரர்களும் அவரை காண மருத்துவ மனை சென்றோம்." இவ்வாறு அன்சிலோடி தெரிவித்தார்.

**விளையாட முடியும்** - ஏ.சி.மிலன் அணியின் மருத்துவர் வால்டர் பாஸ்கேல் ரொனால்டோ வினால் மீண்டும் விளையாடமுடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், "8 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட தற்போது மருத்துவ துறை நன்றாக வளர்ந்துவிட்டது. அவரது காயம் குணமாக கூடியது தான் என்றாலும் எவ்வளவு நாட்கள் தேவைப்படும் என்பதை உறுதியாக கூறமுடியாது." என்றார்.



**எஸ். கணேஷ்**


**Raphael Maharaja**
**Barrister, Solicitor & Notary Public**

**கனேடியத் தமிழ் வழக்கறிஞர்**



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



**Tel: 416-847-7077    Fax: 416-847-7088**

# புதிதாக நிர்மாணிக்கும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்தே செல்கின்றது

புதிதாக நிர்மாணம் செய்ய இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை, மாசி (February) மாதத்தில் எதிர்பார்த்ததை விட மிக அதிகமாக உள்ளது.

குறிப்பாக புதிதாக கட்ட இருக்கும் அடுக்குமாடிக்கட்டிடங்கள் அதிகமாக இருக்கிறது. இதில் முக்கிய விடயம் என்ன என்றால் அமெரிக்க பொருளாதாரம் இறங்குமுகமாக செல்லும்போது, கனடிய பொருளாதாரம் ஏறுமுகமாக செல்கின்றது.

இருந்தும், புதிதாக பதவி ஏற்று இருக்கும் கனடிய மத்திய வங்கி ஆளுனர் மார்க் கார்னி, கடைசியாக நடத்திய மத்திய வங்கியின் கூட்டத்தில் மத்திய வங்கியின் வட்டி வீதத்தை ½ இனால் குறைத்துள்ளார். அதாவது 4% இலிருந்து 3.5% ஆகக் குறைத்துள்ளனர். இதனால் முதன்மை வட்டி வீதமும் 5.25% ஆகக் குறைந்துள்ளது. Variable Mortgage இல் வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர்களின் மாதாந்த கட்டுப்பணத்தில் குறிப்பிடத்தக்களவு இறக்கத்தைக் காணக்கூடியதாக உள்ளது. பொருளாதார நிபுணர்களின் எதிர்வுகூறலின்படி, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22, 2008 அன்று மீண்டும் கூடவிருக்கும், மத்தியவங்கி குழுவினர் மேலும் வட்டிவீதத்தை குறைக்கலாம் என எதிர்பார்க்கலாம். வட்டிவீதத்தை குறைத்து வருவது எதிர்காலத்தில் கனடிய பொருளாதாரத்தில் ஏற்பட இருக்கும், இறுக்கத்தை கட்டுக்குள் கொண்டுவர இருக்கும் முன்னேற்பாடாக கொள்ளலாம். அமெரிக்க பொருளாதாரத்தின் படுபயங்கரமான நிலை, கனடாவிற்கும் பரவலாம் என்பது அனேகரின் எண்ணம். இதனை தவிர்ப்பதற்காக இவ்வாறு வட்டிவீதம் குறைப்பதாகக் கொள்ளலாம். இருந்தபோதிலும், CMHC இன் எதிர்வு கூறலின்படி வருட கடைசியில் வீட்டின் விலையில் சிறிது இறக்கம் ஏற்படலாம் என தெரியவருகின்றது.



கனடாவில் புதிதாக கட்டப்பட இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை பெப்ரவரி 2008இல் 256,900 ஆக இருந்தது. இந்த எண்ணிக்கை ஜனவரி 222,700 ஆகக் காணப்பட்டது, பெப்ரவரி மாதத்தின் காலநிலை மிக மோசமாக இருந்தபோதும் இந்த எண்ணிக்கை எதிர்பார்த்ததைவிட அதிகரித்தே காணக்கூடியதாக உள்ளது. இந்த வீடுகளின் அதிகரிப்பு வன்கூவரில் ஆகக்கூடியதாக 45.2% ஆக உள்ளது. ஒன்ராரியோவில் இந்த அதிகரிப்பு 16.4% ஆகக் காணப்படுகின்றது. ஒப்பீட்டளவில் வன்கூவருடன் ஒப்பிடும்போது ஒன்ராரியோவில் குறைவாக இருந்த போதிலும் கட்டப்பட இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்தே உள்ளது. இதற்கு ரொறொன்ரோவையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் புதிதுபுதிதாக கட்டப்பட இருக்கும் அடுக்குமாடிக்கட்டிடத்தின் அதிகரித்த விற்பனையே காரணம்.

மாதாந்த கட்டுபணத்தின் அதிகரிப்பு, எதிர்காலத்தில், விலை இறக்கத்தை கொடுக்கும் என்பதனை எதிர்பார்க்கலாம். வட்டி வீதத்தின் இறக்கம், இந்த நிலைமையில் ஒரு சமநிலையை கொண்டு வரலாம் என எதிர்பார்க்கலாம்.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 271**


ஸ்காபரோ, மிசிசாக இரு இடங்களில், 100இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

## HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

### Condo. for sale

- Finch & Middlefield
- 2 + 1 bedrooms
- Low maintaince fee
- Fridge & Stove
- parking
- Only One year old
- 1 washroom
- washer & dryer
- B/I Dishwaswher
- All Electric Light Fixture
- Price $179, 000

### Condo. for sale

- HWY 427 & Rexdaly
- Fridge & Stove
- washer & dryer
- Close to Go & TTC, HWYs 427, 27, 409, 407, 401 Humber College, Woodbine Centre
- 1 bedroom brand new unit
- Dishwaswher
- All Electric Light Fixture
- Price $179,000

**Nantha Aiyadurai**

**Cell: 613 850 9931**

COLDWELL BANKER
COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

**Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1**

# உணர்வு துண்டாடப்பட்ட வேளையில்

எயிற்ஸ் நோயைப்
பற்றிக்கொண்ட பலர்
துணிவுடன்
ஊடகத்துக்கு
தமது
முழு உருவத்தையும் காண்பித்தனர்
ஏனைய பொதுமக்களைக்
காப்பாற்றும் நோக்குடன்

இத்தனை அழகு
இத்தனை இளமை
செழுமைகொண்ட
இவர்களுக்கு
'எச். ஐ . வி'
தொற்றக் காரணம் என்ன?

செல்போனில்
அழைப்புக்களை எதிர்பார்க்கும்
உழைப்புக்கான
அவசியம் என்ன?

அதோ தெரிகிறது
முச்சந்தி வட்ட வளைவில்
ஓர் விளம்பரப் பலகை

மஞ்சள் நிறத்தில்:

'ஆசை எளியது
அடக்கம் வலியது
எயிற்ஸ் கொடியது'
என்றவாறு



ஆனால்
'கொடிது கொடிது
இளமையில்
வறுமை கொடிது'

எனும் சொற்கூட்டங்களோ
நடைபாதையில்
மிதிபடுகின்றன



முத்துராஜா

# திருகொக்கட்டிச்சோலை

பண்: திருத்தாண்டகம்

உண்ணேரா வித்தலைவர் ஒப்பில் லாதார்
உயிர்களைத்தங் கருணையினால் ஓங்கு விப்பார்
கண்ணானார் மணியானார் கருத்து மானார்
கதியானார் விதியானார் மதியு மானார்
மண்ணோரும் விண்ணோரும் மகிழ்ந்து வந்து
வணங்கவரும் வரங்களினை வழங்கி நிற்பார்
தண்ணாரும் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

பெண்ணையிடப் பாகத்திற் பேணி வைத்தார்
பித்தனெனத் தோழரிடம் பட்டம் பெற்றார்
கண்ணுதலார் கலைமதியார் கங்கை கொண்டார்
கானகத்தார் ஏவியமா கரியைக் கொன்றார்
மண்முனையிற் பெண்ணரசு மலரச் செய்தார்
மாகோனின் தொண்டுகளுக் கருளி நின்றார்
தண்ணிழலார் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

மலர்மேனி மலைமாதை மணம்பு ரிந்தார்
மாமுனியைத் தென்னாட்டில் வாழ வைத்தார்
கலைமேவு கால்தூக்கி முனிவர் காணக்
கருதரிய நடமாடிக் களித்து நின்றார்
உலகோம்பும் தனியொருவர் உயிர்கட் கெல்லாம்
உறுதுணைவர் உலகநாச் சியாரு வந்த
தலமாய கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

அழித்தாளக் கயமுகனை ஆற்றல் மிக்க
ஆனைமுகப் பெருமானை அழைத்து வந்தார்
அழத்தாங்க வொண்ணாது குழந்தை யாருக்(கு)
அம்மையுடன் எழுந்தருளிப் பால்கொ டுத்தார்
விழித்துள்ள தமிழீழ மக்கட் கான
விடிவுதனைக் காட்டாதும் இருப்பா ராமோ
தழைத்தோங்கு கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

தோன்றாதே புலனைந்தும் தொடர்ந்தி யற்றும்
தொல்லைகளைத் துடைத்தின்பம் துலங்க வைப்பார்
ஈன்றாளின் மேலான இதய முள்ளார்
ஏழைகளுக்(கு) இரங்குவதில் இணையில் லாதார்
ஊன்றியுயர் வரலாற்றின் உச்சி யுள்ளார்
உலகநாச் சியாரன்பில் ஊறி யுள்ளார்
சான்றோர்வாழ் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

திமிர்வாதச் செருக்கசுரர் தீங்கை யெல்லாம்
தீர்த்தமரர் வாழ்க்கையினைச் சிறக்கச் செய்தார்
அமைவான நல்வாழ்வை எமக்கும் ஈவார்
அதிகாரம் இருந்தாலும் அடங்கிப் போவார்
கமழ்கின்ற மலர்ச்சோலைக் குயில்கள் பாடும்
கலைமான்கள் அதைக்கேட்டுக் களிப்பில் ஆடும்
தமிழ்வாழும் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

மனாழியினால்(1) இலங்கையினை வடித்தெ டுத்தார்
வல்லதிரு நீற்றுநெறி வளர விட்டார்
மனோவலிமை மிகுமன்னன் வணங்கா நெஞ்சன்
மாவீரன் இராவணர்க்கு வரம ளித்தார்
அனாதைகளாய் நாமலைந்தே அனுப விக்கும்
அல்லலுக்கும் அருளாதே யமர்வா ராமோ
சனாதனவூர் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

உளவறிவார் ஒட்டிநின்றே உழைப்பாற் காணும்
உயர்வதனால் அழுக்காறு கொண்டு ழல்வார்
அளவறியார் யாவுந்தம் ஆட்சி யின்கீழ்
அமைந்துவிட வேண்டுமென அங்க லாய்ப்பார்
பிளவறியாத் தமிழரையும் பிரிய வைப்பார்
பிறங்குதமிழ் ஈழத்தைப் பெறுதல் வேண்டித்
தளர்வறியாக் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

அரவமதை மாலையென அணிந்து கொண்டார்
அழகுமயில் ஆரணங்கை மணந்து கொண்டார்
குருவடிவில் எழுந்தருளிக் கூர்த்த அன்பர்
குறைபோக்கி ஆண்டருளும் கொள்கை யுள்ளார்
பருவமழை தவறாது வளஞ்செய் கின்ற
பழம்பெருமை சான்றகிழக் கிலங்கை தன்னில்
தரணிபுகழ் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

ஊழ்வெல்லல் அரிதென்ப துணர்ந்தி டாதே
உலகத்தார் பலகற்றும் மீண்டும் மீண்டும்
ஆழ்கின்றார் தீவினையில் அறிவில் லாதார்
அறிந்தவர்சொல் அனுபவமும் கேட்டி டாதார்
வாழ்வென்றால் சைவநெறி வகுத்த வாழ்வே
வாழ்வென்னும் மாசற்றார் வாழ்வ தாலே
தாழ்வில்லாக் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

(1) மன் ஆழி - நிலைபெற்ற மாகடல். ஓசைநோக்கி மனாழியாயிற்று.

கொக்கட்டிச்சோலை கிழக்கு இலங்கையில் உள்ள மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ளது. கிழக்கு இலங்கையில் மண்முனை இராச்சியத்தை ஆண்ட உலகநாச்சியாரால் (கி.பி. 4ஆம் நூற்றாண்டு) இவ்வாலயம் அமைக்கப்பட்டதென மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.



கவிஞர் வி. கந்தவனம்


SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL
Excellent Quality - Low Cost Training
Truck licence A-Z
From $599.00



In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

• A-Z & D-Z up grade • One on One Training
• Job Placement Right Away!
• உடனடி வேலை வாய்ப்புக்கள்
• வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake
Fork Lift licence
From $75.00
சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: Pl. Call: Raja / Shan
416.913.9574/416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



S M I L E
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days



யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• பலன் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# உடல் நிலைமை பாதிப்பால் தொழில் வருமானம் இழந்தவர்களுக்குரிய காப்புறுதி திட்டம்

## Disability Insurance

## வினா விடை தொடர் - 16 -

வினா விடை (1)

உடல் நிலைமை பாதிப்பால் தொழில் வருமானம் இழந்தவர்களுக்குரிய காப்புறுதி திட்டம்(Disability Insurance) என்றால் என்ன?

**இது**

A. **கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness Insurance)**

மற்றும்

B. **ஆயுள் காப்புறுதி (Life Insurance)**

ஆகிய இரண்டு திட்டத்திலும் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.?


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


உடல் நிலைமையில் ஏற்பட்ட பாதிப்பு என்பது அன்றாடம் செய்யும் தொழிலை செய்ய முடியாது உள்ளது என்பது மருத்துவ அத்தாட்சியுடன் நிரூபிக்கப்படும் போது, தொழிலில் பெற்ற மாத வருமானத்தின் ஒரு பகுதியினை காப்புறுதி கம்பனியில் இருந்து பெற்று கொள்ளும் நோக்கில் காப்புறுதி கம்பனியுடன் செய்து கொள்ளும் ஒரு உடன்படிக்கையே இவ்வுடல் இயலாமைக்குரிய காப்புறுதி திட்டம் (Disability Insurance) ஆகும்.

இங்கு தொழிலில் ஏற்கனவே பெற்ற மாத வருமானம் என்பதனை அடிப்படையாக வைத்தே வழங்கப் போகும் வருமான இழப்பீடு தீர்மானிக்கப்படும். ஏற்கனவே செய்து வந்த தொழில் செய்ய முடியாத நிலைமையில் உடல் நிலைமை ஏதாவது ஒரு நோயினாலேயோ அல்லது விபத்தினாலேயோ பாதிக்கப்பட்டுள்ளது என்பது மருத்துவ அத்தாட்சிகளுடன் நிரூபிக்கப்படல் வேண்டும். ஆனால் இங்கு ஒரு முக்கியமான விடயம்! உடல் நிலைமை பாதிப்பில் இருந்து தேறி தொடர்ந்தும் தொழில் செய்ய முடியும் என்ற நிலைமை வரும்போது மாத இழப்பீட்டு வருமானம் நிறுத்தப்பட்டு விடும். மாத இழப்பீட்டு வருமானமும் எவ்வளவு காலம் கிடைக்கும் என்பதும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பொதுவாக 65வயது வரை மாத இழப்பீட்டு நிவாரணம் வழங்கும் ஒப்பந்தங்கள் பல காப்புறுதி கம்பனிகளினால் சந்தைப்படுத்தப்படுகின்றன. உடல் இயங்க முடியாத நிலைமை ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்கும் ஒப்பந்தங்களும் காப்புறுதி கம்பனிகளினால் சந்தைப்படுத்தப்படுகின்றன. இவைகள் சற்று மலிவானதாக இருக்கும்.

கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டம் (Critical Illness Insurance) எனப்படும் போது அது குறிப்பிடப்பட்ட சில கொடிய நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்ட ஒருவர், ஒப்பந்தத்தில் ஒவ்வொரு நோய் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்தினுள் இந்நோய் உருவாகியுள்ளது என்பது மருத்துவ அத்தாட்சியுடன் நிரூபிக்கப்படும் போது மிக பெரும் தொகையினை (அது இலட்சங்களாகவோ அல்லது மில்லியனாகவோ இருக்கலாம்) நட்டஈடாக பெற்றுக்கொள்ளும் ஒரு உடன்படிக்கை ஒப்பந்தம் ஆகும்.

ஆயுள் காப்புறுதி (Life Insurance) எனப்படும் போது அது ஒப்பந்தத்தினை செய்தவருக்குரிய "உயிர் இழப்பு" அதாவது "மரணம்" என ஒன்று ஏற்படும் போது இம் மரணத்தினால் பாதிப்பினை உருவாக்கலாம் என எதிர்பார்க்கும் தங்கி இருப்பவர்களுக்கு வழங்கும் ஒரு பெரிய நட்ட ஈட்டுத்தொகை ஆகும். (இதுவும் லட்சங்களாகவோ அல்லது மில்லியன்களாகவோ இருக்கலாம்)

ஆயுள் காப்புறுதியும், கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டமும் ஒருவர் எத்தனை இடங்களிலும், எத்தனை ஒப்பந்தங்களையும் வைத்திருக்கலாம். ஒவ்வொரு கம்பனிக்கு விண்ணப்பிக்கும் போதும் ஏனைய கம்பனிகள், அல்லது அதே கம்பனியில் இதே ஒப்பந்தம் ஏற்கனவே செய்து வைத்திருக்கிறீர்களா? என புலனாய்வு செய்து கொள்வார்கள். காப்புறுதி கம்பனியின் தீர்மானத்திற்கு நேர்மையான முறையில் பதில் வழங்கினால் சரி ஒப்பந்தங்கள் வலிமையுடையதாக இருந்தால் நட்டஈடு பெறுவதில் எந்த ஒரு தடையும் இருக்கமாட்டாது. ஆனால் "உடல் இயலாமை காப்புறுதி திட்டம்" மாத்திரம் ஒன்றுக்கு மேல் பல கம்பனிகளில் ஒப்பந்தம் வைத்திருந்தாலும், ஏற்கனவே செய்து வந்த தொழிலில் இருந்து பெற்ற மாத வருமானத்திற்கு மேலாக நிவாரணம் வழங்கமாட்டார்கள்.

மாத வருமானத்தினை நிரூபிக்கும் வகையில் கனடிய வருமான வரிக்கு சமர்ப்பித்த அறிக்கைகள் விண்ணப்பத்தின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ் ஒப்பந்தத்தில் பெறப்படும் காப்புறுதி நட்டஈடு உடல் இயலாத நிலைமையில் இருந்து மீறும் வரை பெறும் மாத வருமான இழப்பீட்டு நிவாரணம் ஆகும். இங்கு உடல் இயலாத நிலைமை என்பது சாதாரண முதுகு வலியில் இருந்து, கால், கை நோ வரை இருக்கலாம். ஆயுள் காப்புறுதி திட்டத்தில் இருந்தோ அல்லது கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டத்தில் இருந்தோ பெறுவது மிக பெரிய ஒரு முறைமட்டும் வழங்கும் பெரிய தொகையாகும்.

ஏனெனில் கொடிய நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தொடர்ந்து உயிர் வாழலாம். ஆனால் பூரணமாக அதில் இருந்து மீள முடியாது. இதேபோல் உயிர் இழப்பு என்பதும் மீள முடியாது ஒன்று.

**இக்காப்புறுதி திட்டத்தில் இருந்து மாத இழப்பீட்டு நிவாரணம் என்பது எவ்வளவு வருடங்களுக்கு வழங்கிக் கொண்டேயிருப்பார்கள்.**

வருமான இழப்பீட்டு நிவாரணத்தினை தொடர்ந்து பெற்று கொள்ளும் காலம் எவ்வளவு என்பதனை ஒப்பந்தத்தில் விரும்பியபடி தீர்மானித்து கொள்ளலாம். அதாவது

• இரு வருடங்களுக்கு • ஐந்து வருடங்களுக்கு • பத்து வருடங்களுக்கு • 65 வயது வரை

65 வயது வரை வருமான இழப்பீட்டு நிவாரணத்தினை பெற்று கொள்ளும் ஒப்பந்தம் பெறும் போது அதற்குரிய விலை ஏனையவற்றினை விட சற்று அதிகமாகும். இவ்வயது வரையே ஒரு மனிதனின் தொழில் செய்யும் காலம் என்பதால் இவ்வயதின் பின்பு இத்திட்டம் இரத்தாகி விடும். இவ்வயதின் பின்பு ஓய்வூதியம் பெறும் நிலைமை உருவாகுவதால் அத்தகைய திட்டங்களில் இருந்து வருமானங்களை பெற்று கொள்ளலாம்.

இக்காப்புறுதி திட்டத்தில் இருந்து மாத வருமான இழப்பீட்டு நிவாரணத்தினை பெறும் போது குறிப்பிடப்படும் 'கால தாமதம்' (Waiting Period) என்றால் என்ன?

தொழில் செய்ய முடியாத அளவுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்ட முதல் நாளில் இருந்து எவ்வளவு காலத்தின் பின்பு மாத நிவாரணத்தினை பெற்று கொள்ளலாம் என்பதும் ஒப்பந்தத்தில் தெளிவாக செய்து கொள்ளலாம். இது முப்பது நாட்கள், அறுபது நாட்கள், தொண்ணூறு என குறிப்பிடலாம். இவ்வளவு காலதாமதம் இல்லாது உடனடியாக நிவாரணம் பெறலாம். இங்கு காலதாமதம் என்பது அதிக நாட்களாக ஒப்பந்தத்தில் குறிப்பிடும் போது மாத கட்டுப்பணம் குறைவாக இருக்கும்.

காலதாமதம் குறைவாக அல்லது காலதாமதமே இல்லாது ஒப்பந்தம் கைச்சாத்திடும் போது மாதா மாதம் செலுத்தும் கட்டுப்பணமும் சற்று அதிகமாவே இருக்கும்.




EXPERT BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108

Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER

CAHPI Ontario



ELROD RENOVATIONS

- Kitchen
- Washroom
- Hardwood Flooring
- Laminate Flooring
- Tilling
- Pluming
- Electrical Work
- Painting
- Separate Entrance
- Full Basement

Free Estimate & Consultation



Call now at: 416-712-1016 Celestine (Prem)



அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
BRAND ®
Niru
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
Niru Niru
நிரு பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# கிழக்கு மாகாணத்தில்...

1ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கையில் இலக்கு வைக்கப்பட்டுள்ள அநேகமான ஊடகவியலாளர்கள் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 2006 இலிருந்து அரச அதிகாரிகளும், அரச சார்பு தமிழ் ஆயுதக் குழுவினரும் பத்திரிகையாளர்களை இலக்கு வைத்திருக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். பத்திரிகை அலுவலகங்கள் மூடப்பட்டமை, செய்தித் தணிக்கை, மிரட்டல் போன்றவை இலங்கையில் ஊடக சுதந்திரத்திற்கான கடும் அச்சுறுத்தல்களாக உள்ளன.

படுகொலைகள் குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை எனத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி, பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயலணிக் குழு விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்க வேண்டுமென்றும் கோரியுள்ளார். இதேவேளை, இலங்கையில் பலவந்தமாகக் காணாமற் போதல் பரந்துபட்ட அளவில் இடம்பெறுவதாக வெளியாகும் தகவல்கள் குறித்து அவுஸ்திரேலியா கவலையடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளுக்கான அவுஸ்திரேலியத் தூதுக்குழுவின் முதன்மைச் செயலாளர் லாரா நசோ, காணாமல் போதல் தொடர்பில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களை நீதியின் முன் நிறுத்துமாறு இலங்கை அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். குற்றங்களில் ஈடுபடுவோருக்கு வசதியாக விசேடமாக வழங்கப்பட்டுள்ள விசேட சட்ட விலக்களிப்பு வசதியே காணாமற் போகச் செய்தலைத் தொடர்வதற்குத் தூண்டுகின்றது என ஐக்கிய நாடுகளின் விசேட செயலணிக்குழு சுட்டிக்காட்டியிருப்பதை அவர் குறிப்பிட்டுக்காட்டினார். சட்ட விலக்களிப்பு முறைமையை விலக்கி, பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றார் அவர்.

சுவிட்ஸர்லாந்தின் ஐக்கிய நாடுகளுக்கான பிரதிநிதி நட்டாலி கோஹ்லி, இலங்கையில் சித்திரவதை நடைமுறை பரந்துபட்ட அளவில் காணப்படுவது கண்டிக்கத்தக்கது எனத் தெரிவித்துள்ளதுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் செல்வதற்கு அனுமதி வழங்கப்படாமை குறித்துக் கவலை வெளியிட்டுள்ளார். ஐக்கிய நாடுகளுக்கான டென்மார்க்கின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேரி லூயில் ஓவர் வடே, இலங்கை நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கான விசேட அறிக்கையாளர் மான்பிரெட் நொவாக்கிடம் மேலும் விளக்கம் கோரியுள்ளதுடன் இலங்கை ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். உரிமைகள் மற்றும் மக்கள் விடுதலைக்கான சர்வதேச லீக் எனும் அமைப்பின் பிரதிநிதி வெரௌனா கிரஸ்வும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலின் விவாதத்தில் இலங்கை குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளார். இலங்கையில் 1970 களிலிருந்து சித்திரவதை நடைமுறை பரந்துபட்ட அளவில் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர் ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரால் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல முடியாமல் போனதால் யாழ்ப்பாணத்தில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகப் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் குறித்து அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இலங்கை அரசு சித்திரவதை உட்பட ஏனைய மனிதாபிமானமற்ற தண்டனைகளுக்கு எதிரான பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ள போதிலும் அவை தொடர்ந்து நடைபெறுவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்த விரும்பும் மக்களுக்கு எதிராக அரசு தொடுத்துள்ள யுத்தத்தின் ஒரு பகுதியே இந்தச் சித்திரவதை என்றும் அவர் தெரிவித்துள்ளார். கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்ட நாடென்ற வகையில் இலங்கையின் சார்பில் உரையாற்றிய இலங்கையின் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் 'மிந்திரா பெர்னான்டோ இலங்கையில் சித்திரவதை நடைமுறை பரந்துபட்டளவில் காணப்படுவதாக ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் தெரிவித்துள்ளமை குறித்து கவலை வெளியிட்டார். இலங்கையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை அலுவலகத்தைத் திறப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், அதற்குப் பதிலாகத் தேசிய கட்டமைப்புகளை வலுப்படுத்துவதே தற்போதைய தேவை எனக் குறிப்பிட்டார்

நிலைமைகள் இவ்வாறு இருக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்நிலை இராஜதந்திரிகள் குழு ஒன்று இலங்கைக்கு பயணம் செய்துள்ளது. கடந்த வாரம் இலங்கை சென்றடைந்திருக்கும் இக்குழு ஒரு மாதகாலம் அங்கு தங்கியிருந்து நிலைமைகளை அவதானிக்கவுள்ளது. இக்குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் சிறீலங்காவுக்கு வழங்க இருக்கும் பொருளாதார உதவிகள் குறித்து தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


## வாடகை வீட்டை சொந்த வீடாக மாற்றுவது எப்படி?

- வந்த நாளிலிருந்தே வாடகைக்கே பல ஆயிரம் டொலர்கள் கொடுத்து வாழ்ந்து விட்டீர்களா?
- நீங்கள் கட்டும் வாடகைப்பணத்திலே தான் வீட்டுச் சொந்தக்காரன் தனது Mortgage ஐக் கட்டி அந்த வீட்டை தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான் என்பதை அறிவீர்களா?
- அந்த வாடகைப் பணத்திலேயே ஏன் நீங்கள் ஒரு சொந்த வீட்டை அமைக்கக்கூடாது?
- நீங்களும் எப்படி ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரனாக ஆகலாம் என்பதற்கான பல வழிமுறைகளை விளக்கி இத்துறையில் பல ஆண்டுகால அனுபவமுள்ளவர்களினால் தயாரிக்கப்பட்ட ஒரு விசேட அறிக்கை எம்மிடம் உள்ளது.
- இந்த அறிக்கையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம். **416-284-9999** Ext. 20 (தமிழ்) Ext. 33 (English)



## SAFETY TRUCKS

### Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z

In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course




20 Years Canadian Experience with Trucks

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3



## MOHAN

### HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# என்னை நானே மன்னிப்பதன் மாண்பு

இதுவரை, என்னை நானே சீர்தூக்கிப் பார்த்து எனக்கெதிராகத் தவறான தீர்ப்பு வழங்கியதற்காக, இன்று நான் மனப்பூர்வமாக என்னை மன்னித்து விடுகின்றேன்.

பிரியமான வாசகர்ளே! இதோ உனக்கே உனக்காக ஒரு பிரார்த்தனை! மங்களகரம், தெய்வீகம், புனிதம் நிறை ஆன்ம சக்தியோ! இன்று நான் என்னை மன்னிக்கின்றேன். ஆண்டவனின் பரிபூரண சிருஷ்டியாகிய தனித்துவம் நிறை எனது சுயத்தைக் குறைவாக மதிப்பிட்டதற்காக என்னை மன்னிக்கின்றேன். நான் கெட்டவன், நல்லவன் இல்லை எனப் பிழையாக மதிப்பிட்டதற்காக என்னை நான் மன்னிக்கின்றேன். நான் விரும்பிய எனது அத்தியாவசியத் தேவைகளை எனக்குத் தர வேண்டும் என இறைவனிடம் கேட்காததற்கு என்னை மன்னிக்கின்றேன். நான் சந்தோஷமாக வாழந்திடத் தகுதியற்றவன் என நம்பியதற்காக என்னை மன்னிக்கின்றேன். இத்தவறான நம்பிக்கையால் நான் செய்த அல்லது செய்யத் தவறிய சகலவற்றிற்கும் என்னை மன்னிக்கின்றேன். எனது சுயத்திற்கு எதிராக இதுவரை நான் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த தவறான மதிப்பீடுகளிற்காக என்னை மன்னிக்கின்றேன். இதை ஆதரித்த எனது சகல நடவடிக்கைளிற்கும் என்னை மன்னிக்கின்றேன். எனது உடலுக்கு எதிரான எனது மதிப்பீட்டிற்காக என்னை மன்னித்துக் கொள்கின்றேன். ஏதேதோ பலவீனங்கள் பல எனக்கு இருக்கின்றன என நம்பியதற்காக என்னை மன்னிக்கின்றேன். எனது சுயத்திற்கும் எனக்கும் எதிராகத் தவறான மதிப்பீடுகளை வைத்திருந்தால், இறைவனளித்த எனது திறமைகள் எனக்கூடாக வெளிவந்து விகசிப்பதை இதுவரை தடுத்து வைத்திருந்த தற்காக என்னை நான் மன்னிக்கின்றேன்.
நான் பலவீனமானவன் என இதுவரை நினைத் திருந்ததற்காக என்னை மன்னிக்கின்றேன். நான்



பூரணமானவன் என்பதை மறந்து என்னைக் குறைவாக மதிப்பிட்டதற்காக என்னை நான் மன்னிக்கின்றேன். என்னுடன் நானே கோபித்துக் கொண்டிருந்ததற்காக என்னை மன்னிக்கின்றேன். தொடர்ந்தும் என்னுடன் கோபித்துக் கொண்டிருப்பதற்காக, நான் செய்த அல்லது செய்யத் தவறியவற்றிற்காக என்னை மன்னித்துக் கொள்கின்றேன். என் சுயத்தினை முற்றுமுழுதாய் நம்பாததற்காகவும் என்னை மன்னித்துக் கொள்கின்றேன்.

நான் நம்பிக்கைக்குகந்தவன் அல்ல என்பதை ஆதரிப்பதற்காக நான் செய்த சகலவற்றிற்கும் என்னை நான் மன்னிக்கின்றேன். ஆன்மீக சக்திவடிவமாகிய எனது தனித்வ சுயத்தின் பூரண வளர்ச்சிக்கு, என்னைப் பற்றிய எனது தவறான மதிப்பீடுகள் எத்தகைய குந்தகம் விளைவித்திருக்கும் என்பதை இப்போ நன்கு உணர்கின்றபடியால், ஒருவிதமான நிபந்தனையு மற்று, இன்று என்னை நான் முற்றுமுழுதாய் மன்னிக்கின்றேன்.

அன்பானவரே! மற்றவர்களே மன்னிப்பது மட்டுமே முக்கியம் என இதுவரை நினைத்திருக்கலாம். உனக்கு எதிராக, தெரிந்தோ, தெரியாமலே நீ செய்த தவறுகள் யாவற்றிற்குமாக உன்னை மனப்பூர்வமாக இன்று மன்னித்து விடு.

என்னிடமிருந்து, மன்னிப்பு எனும் மாமருந்தினை நானே எனக்களித்து, அதை விசுவாசத்துடன் அங்கீகரித்து என் குறைகளைக் குணப்படுத்திக் கொள்ள இன்று முதல் ஆரம்பிக்கின்றேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 121


மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி





GOODWILL CONSTRUCTION
AND DECORATION

Kevin Chen Tel: 647-290-7128 (in English)

*Free Estimation*

Hardwood Flooring
Laminating and Tiling
Painting
Plumbing and Electrical Installation
Basement and Washroom Upgrading
Kitchenwares and Cabints(Factory Sale)



# WELCOME TO GTA SQUARE

Middlefield/Finch
Scarborough

## 5215 Finch Ave-E, Scarborough, ON, M1S 0C2

## *We started our Business since DEC 12/2007

*

**RVL**
ELECTRONIC INC.
Repairs, Sales & Service



Call : Ravi
(Licensed Technician)

416-265-1208
416-988-0965

LCD TV's, Projection TV's Plasma TV's, Car Stereo's
And All Types of Electronics Devices

*

**KRISHNA'S**



TAILORING
TEXTILES & GIFTS

(416) 497 6427

**EAGLE'S
DRY CLEANERS &
ALTERATIONS**

** FREE PICK-UP & DELIVERY**

(416) 291 9777



"Certain Conditions"

*

**UNIQUE
FINANCIAL**



Business
Solutions Inc.

(416) 854 6183

**ASHMITHA
BUSINESS CENTRE**

• COPY & PRINT
• *Black & White copy from 2.5 cents*

• Brochure
• Letterheads
• Postcards
• Door Hanger
• Business Cards
• Notepads
• Bookmarks
• Greeting Cards

*GTA Square Mall: Unit 159*

416-298-0505

**FREE TO AIR
SATELLITE SYSTEM**

> For Installation, System Upgrading, Security Camera & House Alarm



• Sun TV
•Apunj
• Pak TV
• Surya TV
•Gemini TV
• Zee TV
• KTV
• B4U
• Kairali
• Sony TV
• Cricket
• And More

*GTA Square Mall: Unit 105*

416-670-8248

**SAJECHO**

*Electronics & Computers*

> Sales - Service -
Repair & Upgrade

*GTA Square
Mall: Unit 105*



416-916-3357

# பிடல் காஸ்ரோ ஒரு சகாப்தம் - 2

சேகுவாராவுக்கு என்ன நடந்தது?

"I have fulfilled the part of my duty that tied me to the Cuban revolution...and I Say that Goodbye to you, to the comrades, to your people, who are now mine" என்று சேகுவாரா பிடல் காஸ்ரோவுக்கு எழுதிய கடைசிக் கடிதத்தினை பிடல் பகிரங்கமாக ஒக்டோபர் மூன்றாம் திகதி 1965ல் படித்ததின் பின்னர் சேகுவாரா எங்கே? எங்கே? என்று உலகம் முழுதும் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

மிக மிக நீண்டகாலமாக சேயை கொல்ல குறிவைத்திருந்த அமெரிக்க உளவு நிறுவனமான CIA சேகுவாரா உயிரோடு இருக்கின்றாரா? உயிரோடு இருந்தால் எங்கிருக்கின்றார்? என்ன செய்கின்றார் என்பதை அறிய மிக தீவிரமாக முயற்சி செய்தது.

**- செழியன் -**

சேகுவாரா எங்கிருக்கின்றார்? என்ன செய்கின்றார்? என்பது எல்லாம் பிடல் காஸ்ரோவுக்குத் தெரியும். ஆனால் சேயின் இருப்பிடத்தை காட்டிக் கொடுத்தால் சேயின் உயிருக்கு அமெரிக்கா உலை வைத்துவிடும் என்ற காரணத்தினால் பிடல் காஸ்ரோ அதை கடைசிவரை தெரிவிக்கவில்லை.

சேகுவரா கியூபாவில் தன்னிடம் இருந்த பதவி-களை விட்டு விலகியதற்கான காரணம் "கியூபாவை கட்டி எழுப்புவது தொடர்பான அரசியல், பொருளாதார கருத்து வேறுபாடுகள் சேயிற்கும் பிடலுக்கும் ஏற்பட்டது என்றும், அத்தோடு லத்தீன் அமெரிக்க நாடுகளில் புரட்சி செய்ய கியூபா உதவ வேண்டும் தொடர்பான கருத்து வேறுபாடுகளும்" என்று ஒக்டோபர் 18ம் திகதி 1965ல் சிஐஏ உறுதி செய்தது.

இறுதியில் தாம் தேடிக் கொண்டிருக்கும் சே பொலிவிய நாட்டு புரட்சிப் போராளிகளுடன் உள்ளார் என்றும் சி.ஐ.ஏ கண்டுபிடித்தது. 1967 ஏப்பிரல் 28ல் பொலிவியாவின் இராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதற்கான ஒப்பந்தம் அமெரிக்காவினால் கைச்சாத்திடப்பட்டது. அதே ஆண்டு மே மாதம் 11ம் திகதி அமெரிக்க அதிபருக்கு இரகசிய செய்தி பறந்தது. "சே உயிரோடு பொலிவியாவில் தான் இருக்கின்றார். மேலதிக தகவலுக்காக காத்திருக்கின்றோம்" என்று. "சே யை காட்டித் தருபவர்களுக்கு 4200 டொலர்கள் பரிசளிக்கப்படும்" என்று 1967 செப்படம்பர் 15 ம் திகதி பொலிவியா முழுதும் வானத்தில் இருந்து துண்டு பிரசுரங்கள் போட்டு பொலிவியன் அரசாங்கம் அறிவித்தது. இந்த சமயத்தில் எல்லாம் சே தனது டயறிக்குறிப்பை எழுதிக் கொண்டிருந்தார்.

சேகுவாராவை குறிவைத்து தேடுதல் நடவடிக்கைகள் நடந்தன. இதில் பலர் கொல்லப்பட்டனர். இறுதியாக ஒக்டோபர் மாதம் எட்டாம் திகதி 1967 ல் அமெரிக்கா நினைத்தது நடந்தது. அமெரிக்க உளவு நிறுவனமான CIA ஆல் பயிற்சியளிக்கப்பட்டு, CIA ஆல் திட்டமிட்டு வழி நடத்தப்பட்டு, அமெரிக்க ஆயுதங்களை தாங்கிச் சென்ற பொலிவிய நாட்டு இராணுவத்தால் சே என்று அன்பாக அழைக்கப்படும் சேகுவாரா (Che Guevara) துப்பாக்கியால் சுடப்பட்டு கைதியாக எடுத்துச் செல்லப்பட்டார். இது சுமாராக மாலை 3.30க்கு நடந்திருக்கலாம் என்று குறிப்பிடப்படுகின்றது. சே நான்கு இராணுவத்தினரால் ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து La Higuera என்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். கைகள் இரண்டும் பின்புறம் கட்டப்பட்டும், கால்கள் இரண்டும் கட்டப்பட்ட நிலையில் சேயை அங்கு வைத்திருந்தனர். பின்னர் சி.ஐ.ஏ க்கு சே யை கைது செய்துவிட்டோம் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. மறுநாள் காலை பத்து மணிக்கு சேயை என்ன செய்வது என்ற இறுதி உத்தரவு மேலிடத்தில் இருந்து வந்தது. அந்த இரகசியத் தகவல் இப்படி இருந்தது "500, 600".

ஐந்நூறு என்றால் அதனுடைய அர்த்தம் சேகுவாரா. அறுநூறு என்றால் அவரை கொன்றுவிடு என்ற அர்த்தம். இது பொலிவியன் அரசின் உத்தரவு. ஆனால் சேயை துன்புறுத்தி இரகசியங்களை பெறவே சி.ஐ.ஏ விரும்பியது. ஆனால் பொலிவியன் அரசு தனது உத்தரவுதான் முதன்மையானது என்று சொல்லிவிட்டது. அதன் படி சே கொல்லப்பட்டார். ஆனால் சே துப்பாக்கி சண்டையில் தான் இறந்தார் என்று பொய்யாக அறிவிக்கப்பட்டது.

1967 ஒக்டோபர் 12ம் திகதி சேயின் சகோதரர் பொலிவியாவுக்கு Roberto சென்று சேயின் சடலத்தை ஆஜன்டினாவுக்கு எடுத்துச் செல்ல விரும்புவதாக கேட்டார். அப்போது சேயின் உடல் எரிக்கப்பட்டுவிட்டது என்று பதில் அளிக்கப்பட்டது. பத்து நாட்களின் பின்னரான ஒக்டோபர் 18, 1967ல் பொலிவியாவின் அமெரிக்கத் தூதுவரான Douglas Henderson சேயின் மரணத்தை உறுதி செய்து Washington னுக்கு கடிதம் அனுப்பினார். அதில் கொல்லப்பட்ட சேயின் விரல் அடையாளமும் சேர்க்கப்பட்டிருந்தது.

உண்மையில் சே கைகள் துண்டிக்கப்பட்ட பின்னரே இரகசியமான இடத்தில் புதைக்கப்பட்டார். தாம் உண்மையில் சே யை கொன்றுவிட்டோம் என்பதற்கு ஆதாரமாக கொலைகாரர்கள் சேயின் கைகளை துண்டித்து எடுத்துக் கொண்டனர். அந்த புரட்சிக் கரங்கள் CIA agent Gustavo Villoldo விடம் ஒப்படைக்கப்பட்டன.

இதே ஒக்டோபர் 18, 1967ல் சுமார் பத்து இலட்சம் கியூபா மக்களின் முன்நிலையில் (at the Plaza de La Revolución in Havana) ல் பிடல் காஸ்ரோ தனது உயிர் நண்பனுக்காக கண்ணீர் உரையாற்றினார்.

"சேயைக் கொன்று அதை தமது வெற்றி என்று கூறுபவர்களுக்கு கூறுகின்றேன். அந்த அபிப்பிராயம் ஒரு தவறு. சேயின் மரணத்துடன் சேயின் கருத்துகள் எல்லாம் தோற்கடிக்கப்பட்டு விட்டது என்று இவர்கள் நம்புவதும்



அவர்களுடைய மகா தவறான முடிவாகும்" என்று கூறிய பிடல் "If we want to know how we want our children to be," Castro concludes, "we should say, with all our revolutionary mind and heart: We want them to be like Che."

பிடல் காஸ்ரோவின் உரை உடனடியாக அமெரிக்காவினால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு உலகம் முழுதும் ஒலி, ஒளி செய்யப்பட்டது.

பின்னர் இருபது வருடங்களுக்குப் பிறகு, யூலை மாதம் ஐந்தாம் திகதி 1997 ல் மர்மமாக கொலை செய்து இரகசியமான இடத்தில் புதைக்கப்பட்ட சேயின் புதை குழி கண்டுபிடிக்கப்பட்டது. சேகுவராவின் biographer Md Jon Lee Anderson இதை உலகத்திற்கு தெரிவித்தார். அதே சமயம் சேகுவாராவின் இரண்டு கைகளின் எலும்புகளும் இல்லை என்றும். அவை வெட்டப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது.

சேகுவாராவின் முப்பதாவது ஆண்டு நினைவு தினத்தில் சேயின் இந்தக் கொலையின் சூத்திர-தாரிகள் யார் என்பது தெரியப்படுத்தப்பட்டது. அத்தோடு Jorge Castañeda's Compañero: The Life and Death of Che Guevara (Knopf), and Henry Butterfield Ryan's The Fall of Che Guevara (Oxford University Press) புத்தகங்களின் ஆசிரியர்களும் சேயின் படுகொலை தொடர்பான ஆதாரங்களை முன் வைத்திருந்தனர்.

சேகுவாரா கொல்லப்படுவதற்கு முன்பாக தன்னை துப்பாக்கியால் கொன்ற இராணுவ சிப்பாயிடம் கூறிய கடைசி வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

"Know this now, you are killing a man."

(Guevara's last words to the soldier who shot him are reported as: "Know this now, you are killing a man.")

ஆம். உண்மைதான் ஜனநாயகமற்ற ஆட்சியாளருக்கு எதிராக போராடிய மனிதன், மக்களின் நண்பன் சே இறந்து தான் போய்விட்டான். ஆனால் அவனைப் போன்ற மனிதர்கள் மட்டும் மறுபடி மறுபடி வந்து கொண்டிருப்பதுதான் அதிசயமாக உள்ளது. அந்த அதிசயம் யாருக்கும் புரியாத அதிசயமாக அல்லவா உள்ளது. இதை எப்படி நான் உலகத்திற்கு புரியவைப்பது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றேன்.


**APARTMENTS FOR RENT**



*In a NEWLY Renovated High-Rise Apartment Building Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby*

**Pl. Call: 416.264.2818**



# உச்சத்தின் உறுதி

## ஓடும் நீர் உறைவதில்லை 57

நமது வாழ்க்கையானது பல்வேறுபட்ட இயக்கங்களின் ஒருங்கிணைப்பின் மூலம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த இயக்கங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்படு வதற்கு அடிப்படையாக அமைவது இயற்கைச் சக்தியாகும். நாம் ஒவ்வொருவரும் வரையறுக்கப் பட்ட சக்தியைக் கொண்டுள்ளோம். அத்துடன் அந்தச் சக்தியானது முழுமையான சக்தியுடன் ஒன்றுபடுத்தப்பட்டிருப்பதால் நமது ஒவ்வொரு அசைவும் அந்தச் சக்தியின் பங்களிப்பால் இடம்பெறுகின்றது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள சக்தியின் அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும் அந்தச் சக்தியை ஆக்க சக்தியாவும் அழிக்கும் சக்தியாகவும் பயன்படுத்து வதன் மூலம் நமது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றோம்.

நம் ஒவ்வொருவரதும் நாளாந்த வாழ்வியல் முறையைச் சிறிது ஆழமாகப் பார்ப்போமானால் இந்த ஆக்கச் சக்தியினதும் அழிக்கும் சக்தியினதும் பயன்பாட்டை உணர்ந்து கொள்ளலாம். இந்த உணர்வை நாம் அடிக்கடி பரிசீலிப்பது எமது வாழ்வின் சிறப்பான பாதைக்கு வழிவகுப்பதாக அமையும். ஆக்கசக்தி எவற்றை செய்கின்றது என்பதை நாம் விரிவுபடுத்துவதி லும் பார்க்க அழிக்கும் சக்தியின் இயல்பு என்ன என்பதை நாம் அறிந்து கொள்வோமாயின் அவையல்லாதவை அனைத்தும் ஆக்கசக்தியின் செயற்பாடு என்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

நமது அழிக்கும் சக்தியின் தொழிற்பாடானது பல்லாயிரக்கணக்காக அமைவதால் அவற்றை இலகுபடுத்துமுகமாக ஒரு சுருக்கமான வழிமுறையைக் கணிப்பீடாகக் கொள்வது அவசியமாகின்றது. அதாவது நமது ஒவ்வொரு செயற்பாடும் நமக்கும் நமது குடும்பத்திற்கும், நமது சமுதாயத்திற்கும் நன்மையளிப்பதாக அமையாத அனைத்தும் இந்த அழிக்கும் சக்தியின் பயன்பாடே. உதாரணமாக தனிப்பட்ட ஒருவரது தனிநலன் சாராதவிடயங்களான புகைத்தல், மதுஅருந்துதல், பொய்யுரைத்தல் போன்றனவும் ஒருவரது குடும்பநலனைப் புறக்கணித்து அந்தக் குடும்ப அங்கத்தவரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை களும் சமுதாயம் ஒன்றைச் சார்ந்து வாழ்ந்து கொண்டிருந்தும் அந்தச் சமுதாயத்திற்குப் பாதக- மான செயற்பாடுகளில் ஈடுபடுவதும் இந்த அழிக்கும் சக்தியின் செயற்பாடுகளே. எனவே ஆக்கும் சக்தியின் செயற்பாடுகள் எவை என விளங்குவதற்கு அழிக்கும் சக்தியின் செயற்பாடுகள் அல்லாதவை எனக் கூறுவது மிகவும் பொருத்தமானதாகும்.

இன்னொருவகையில் நமது ஆக்கசக்தியின் செயற்பாடானது நமது ஒவ்வொரு செயற்பாடும் நமது வாழ்வியல் நடவடிக்கைகளில் ஒரு நேர்த்தியான (Positive) மாற்றத்தை உருவாக்குவதாக அமையும் என்பதையும் தெளிவாக அறிந்து கொள்ளல் வேண்டும். ஒப்பீட்டு அடிப்படையில் நேர்த்தியான எண்ணங்களையும் செயற்பாடுகளையும் கொண்டவர்கள் தமக்கு இயற்கையால் தரப்பட்ட சக்தியின் பெரும்பகுதியை ஆக்கசக்தியாக மாற்றித் தமது நாளாந்த வாழ்வில் பயன்படுத்துபவர்களாக காணப்படுவார்கள். மாறாக தமது வாழ்க்கையைப் பல்வேறு சிக்கல்களுக்குள் தள்ளி விட்டுத் தட்டுத் தடுமாறி வாழ்பவர்கள் கடந்தகாலங்களில் தமது சக்தியின் பெரும்பகுதியை அழிக்கும் சக்தியாகப் பயன்படுத்தியவர்களாவர். இவ்வாறு இவர்கள் செயற்பட்டமைக்கான காரணங்களாக அறியாமை, தவறான வழிப்படுத்தல், ஆணவம் அல்லது அகங்காரம், அசட்டுத்தனம், சுயநலம், தற்பெருமை, தாழ்வு மனப்பான்மை எனப் பலகாரணிகளை நாம் குறிப்பிடலாம்.

இப்போது ஒருமுக்கியமான விடயத்திற்கு வருவோம். கடந்த காலங்களில் அறிந்தோ அல்லது அறியாமலோ அதிகளவு சக்தியை அழிக்கும் செயற்பாடுகளில் பயன்படுத்தி அவலப்படும் பலருக்கு புதிய பாதை ஒன்றை உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என்பதை ஆராய்வோம். நமது கடந்த காலச் செயற்பாடுகளின் விளைவாக நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் நிகழ்கால வாழ்க்கையை அடுத்தபடிக்கு முன்னெடுத்துச் செல்லமுடியுமா என்பதை ஆராய்வோம். "நாய்க்கு நடுக்கடலுக்குப் போனாலும் நக்குத் தண்ணி தான்" என்று மனிதனை நாயாக்கும் இந்த கூற்று மாற்றியமைக்கப்படக் கூடியதா என்பதைப் பார்ப்போம். எல்லாவற்றுக்கும் மேலாக பூச்சியத்தில் இருந்து இராச்சியத்திற்குப் போக முடியுமா என்பதையும் ஆராய்வோம்.

நமது ஒவ்வொரு நடத்தையும், நடவடிக்கையும் ஏதோ ஒருவகையான நம்பிக்கை (Believe) அடிப்படையில் தான் இடம் பெறுகின்றது. இந்த நம்பிக்கை முறை (Believe System) எவ்வளவு தூரம் எமது எதிர்பார்ப்புகளுக்கு உதவுகின்றது என்பதை நோக்குவோமாயின் நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு உதவுகின்றது என்பதே உண்மையாகும். இந்தத் தெளிவான உண்மையை நாம் மிக முக்கியமாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். நமது ஒவ்வொரு செயற்பாடும் நாம் எதிர்பார்க்கும் விளைவுகளையே நமக்குத் தருகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பலர் இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு முயற்சியை மேற்கொள்ளும் போது ஒவ்வொருவரது எதிர்பார்ப்பும் அதில் வெற்றியடைய வேண்டும் என்பதாக இருந்தும் பல சந்தர்ப்பங்களில் தோல்வியடைகிறார்களே, அப்படியாயின் இது உண்மையற்றதாகக் காணப்படுவதாக வாதிடுவார் கள். இங்கே அடிப்படையில் ஒரு விடயத்தைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். நமது எதிர்பார்ப்பானது நமக்குச் சாதகமானதாக அமையவேண்டும் என்று இருந்தாலும் அதன் மீது எந்த அளவு நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்பது அவசியமானதாகும்.

ஒரு முயற்சியின் வெற்றியும் வெற்றியின்மையும் அந்த முயற்சியின் ஆக்கத்தாரரது உளவியல் முடிவாகும். இந்த உளவியல் சார்ந்த முயற்சியானது இருவகையான இயங்கு முறையால் (System) நிர்ணயிக்கப்படுகின்றது. ஒன்று நம்பிக்கைமுறை (Believe System). மற்றையது விசுவாசமுறை (Faith System). இந்த இருமுறைகளின் சிறப்புத்தன்மையை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் நம்பிக்கை முறைபற்றி ஆராய்வோம். உலகில் நாம் நமது புறக்கண்ணால் காணும் அனைத்தும் இந்த முறையால் அமைக்கப்பட்டவையே. பாடசாலைக் கல்வி முதல் நாம் நாளாந்தம் ஈடுபடும் பெரும்பாலான விடயங்கள் இந்த முறையை அடிப்படையாகக் கொண்டவை. இந்த நம்பிக்கைமுறை (Believe System) யின் அடிப்படை என்னவெனில் நாம் ஒரு முயற்சியில் ஈடுபடுவதற்குப் பல புறக்காரணிகள் ஆதாரமாக அமைவது தான். அதாவது பலர் அந்த முயற்சியில் ஈடுபட்டு எதிர்பார்த்த வெற்றியை அடைந்திருப்பதுடன் மற்றவர்களும் அந்த நிலையை அடைவதற்கான வழிமுறைகளையும் வகுத்து வைத்திருப்பார்கள். பாடசாலை, பல்கலைக்கழகக் கல்வி முறைகள் அனைத்தும் இந்த முறையிலேயே இயங்குகின்றன. ஏற்கனவே மற்றவர்களால் நிரூபிக்கப்பட்ட விடயங்களை மற்றவர்களும் நிறைவேற்றக்கூடிய நம்பிக்கையையும் வழிப்படுத்தலையும் கொண்டமுறையே இது. இதனால் தான் உயர்கல்வியில் ஈடுபடுபவர் களில் அதிபெரும்பான்மை யானவர்கள் சித்தியடைகிறார்கள். இதேபோன்று தான் பல வியாபாரமுயற்சிகள், தொழில் துறைகளில் கூட பலர் முன்கூட்டியே நிரூபித்தல் வழிமுறைகளூடாக எதிர்பார்த்த இலக்கை அடைகிறார்கள். இவ்வாறு இலக்கை அடைவதற்கு ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட விடயத்தில் நம்பிக்கையும் விடாமுயற்சியும் அவசியமாகின்றது. ஒப்பீட்டு ரீதியில் இந்த நம்பிக்கை முறையில் ஈடுபடுபவர்களில் அதி பெரும்பான்மையானவர்கள் தாம் எதிர்பார்த்த இலக்கை அடைகிறார்கள். ஆனால் இந்த இலக்கிற்கு அப்பால் இவர்களால் நகரமுடிவதில்லை. ஏனெனில் அடுத்த இலக்கை அடைவதற்குப்பிறிதொரு நம்பிக்கை முறையைத் தழுவவேண்டிய தேவை ஏற்படுத்துகின்றது. இதனால் தான் முற்கூட்டியே நிரூபிக்கப்பட்ட துறைகளின் நம்பிக்கை முறையை அடிப்படையாகக் கொண்டு இலக்கை அடைபவர்கள் அதிபெரும்பான்மையினராக இருப்பினும் ஒரு குறிப்பிட்ட நிலைக்கு அப்பால் முன்னோக்கி நகர்பவர்கள் மிகமிகக்குறைவாகவே உள்ளனர்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் k. G Master*

**KG Master 416.725.5112**

உண்மையில் உலகின் முன்னோடிகள் சரித்திர நாயகர்கள் சாதனையாளர்கள் என்று நாம் கருதும் அத்தனைபேரும் அந்த நிலையை அடைவதற்குக் காரணமாக இருந்ததில் இந்த நம்பிக்கை முறை மிகச்சிறுபங்கையே வழங்கியிருக்கின்றது. இன்னும் சிறப்பாகக் கூறுவதாயின் இவர்கள் தான், நம்பிக்கை முறையை முதன்முதலில் உருவாக்கியவர்கள். இவர்களால் உருவாக்கப்பட்ட சாதனைகளைப் பலர் முறியடித்துப் புதிய சாதனைகளை உருவாக்குகிறார்கள். இங்கே முதன்முதலில் ஒரு சாதனையை உருவாக்கியவர் விசுவாச முறை (Faith System) யில் உருவாக்கியதும் மற்றவர்களுக்கு அது நம்பிக்கை முறையில் செயற்பாடுவதற்கு வாய்ப்பையும் வழிகாட்டலை யும் கொடுக்கின்றது.

இப்போது விசுவாசமுறை (Faith System) என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். இது ஒருவரது உள்ளார்ந்த உணர்வு. ஒரு விடயத்தில் உச்ச நிலையை அடைவேன் என்ற, சிறியதளவும் சந்தேகமற்ற, மிகவும் உறுதியான, எந்தப் புறக்காரணிகளின் செல்வாக்கிற்கும் உட்படாத, முடிவை முன்கூட்டியே அறியும் உணர்வு. தனது இலக்கு அல்லது குறிக்கோள் எந்தவிதத்திலும் நிறைவேறும் என்று பரிபூரணமாக நம்பும் மனநிலை. ஆனால் எவ்வாறு நிறைவேற்றப்படுமென்றோ அல்லது எந்தவகையான ஆதரவுகள், எதிர்ப்புக்கள் கிடைக்குமென்றோ அல்லது ஏதாவது வழிமுறைகள் வாய்ப்பாக அமையுமென்றோ எள்ளளவுகூட எதிர்பாராத நிலையில் நமது உள்ளதில் எழும் ஒரு உயர்ந்த மனநிலை. இந்த மனநிலையை உடையவரால் மட்டுமே அதன் முடிவை உணரக்கூடியதாக இருப்பதால் மற்றவர்களது பார்வைக்குப் புரியாத புதிராகத் தோன்றும். இந்த மனநிலை ஒருவருக்கு உருவானதும் அவரது ஒவ்வொரு செயற்பாடும் ஏற்கனவே மனக்கண்ணில் பதிந்துள்ள முடிவை பௌதீக அடிப்படையில் மற்றவர்களுக்கு நிரூபிப்பதற்கு பயன்படுத்தப்படும். இந்த முடிவு பற்றிய உறுதிப்பாடு மிகவும் உரமானதாக உள்ளத்தில் பதிந்ததன் பிற்பாடு ஒவ்வொரு கணப்பொழுதும் அந்த முடிவை அனுபவிப்பதில் பயன்படுத்தப்படும். இந்தநிலையை மற்றவர்களால் புரிந்து கொள்ளமுடியாது. அதே நேரத்தில் வார்த்தைகளால் அதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவும் முடியாது. இதனால்தான் இந்த விசுவாசமுறையிலான குறிக்கோள்களைக் கொண்டவர்களது நடத்தைகள் மற்றவர்களின் பார்வைக்குப் பைத்தியத்தனமாகத் தெரியும். இதனால் இவர்கள் பலருடைய கேலிச் சொற்களுக்கும் உட்படுவார்கள். ஆனால் இறுதியில் உலகமே வியக்கும் அளவிற்குச் சாதனைகளைப் புரிந்து விடுவார்கள்.

நாம் தற்போது எந்த நிலையில் இருந்தாலும் ஓர் உயர்வான நிலையை அடைய முடியும். இந்த இயல்பு மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் உண்டு. துரதிஷ்டவசமாக நம்பிக்கை முறையிலான நடவடிக்கைகளைப் பின்பற்றிப் பழகியதால் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைக்கு முடிவுகாண முடியாது எனப்பலர் எண்ணுகிறார்கள். இது தவறு. சில வேளைகளில் உங்களது கடந்த கால அனுபவங்கள் உங்கள் மீது ஒரு வரைய- றையை விதித்திருப்பதை நீங்கள் அறியாதிருக்கலாம். ஆனால் உண்மை என்னவெனில் நம் ஒவ்வொருவரிடமும் அளப்பரிய மனவலிமையுள்ளது. காலங்காலமாக நம்பிக்கைமுறையிலான முயற்சிகளில் மூழ்கிவிட்ட எமக்கு அதற்கு அப்பால் எதுவும் இல்லை என்ற தவறான கருத்தும் புகுத்தப்பட்டு விட்டது. இது நிச்சயமாக உடைத்தெறியப்பட்டு உயர்வானதும் உச்சமானதுமான வாழ்க்கையை ஒவ்வொருவரும் அடையலாம்.

உச்சமான வாழ்க்கைக்கு உறுதி அளிக்கக் கூடியது விசுவாசமுறையிலான செயற்பாடே. இது உள்ளத்தின் உணர்வு. உறுதியானதும் இந்த உணர்வின் உரிமையாளரால் மட்டும் இனங்காணப்படுவதாகும். எந்தவித ஆதாரங்களும் இல்லாமல் எழும் இந்த உணர்வுக்கு இடையூறுகள் என்று எதுமே இல்லை. இந்த உயர்வான உணர்வு படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படுவது கூட நாம் எதிர்பாரதவிதங்களில் இடம் பெறும். இதுவே இதன் தனித்தன்மையுமாகும். இதனால் தான் இந்த உணர்வாளர்கள் வெற்றியாளர்களாகிறார்கள். இவர்கள்தான் சாதனையாளர்களாகிறார்கள். அந்த நிலை எவ்வாறு அடைந்தார்கள் என்பது கூட அவர்களுக்கு ஆச்சரியத்தைத் தருவதாக அமையும். ஏனெனில் இவர்களது சக்தியின் பெருமளவு ஆக்கசக்தியாக அமைவதை இவர்கள் அறிவதில்லை.

ஆம் வாசகர்களே!
உங்கள் வாழ்க்கையின் உச்சமான நிலையை ஒவ்வொருவரும் அடையலாம். அதற்குத் தேவைப்படுவது விசுவாசமுறையிலான நேர்மையும் உண்மையும் பிறர்நலன் சார்ந்ததுமான உள்ளத்து உணர்வே. இதுவே உச்சத்தின் உறுதியாகும்.

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3223 | Saturdays at 10:30 am Rogers Cable Channel - 20 Bell Expressvu Channel - 219 |

# நீயும் ஒரு மகனா?

'துள்ளித் திரிகின்ற காலத்தே என் துடுக் கடக்கி
கொள்ளிக்கும் வைத்த கடனுக்கு மல்லால்
பள்ளிக்கு வைத்திலனே பாதகனாகிய என்
தந்தையே!

மனப் பெட்டகத்திலிருந்து தப்பும் தவறுமாகப் பீறிவர வாய் முணுமுணுக்கிறது. உள்ளமோ வெவ்வேறு சொற்பிரயோகத்துக்காகத் தவமிருக்கிறது. நேற்றுவரை வைரவப்பிள்ளை எனும் நாமத்துடன் இழுத்துக்கிடந்த அந்தக் கூடு ஒட்டியுலர்ந்து உயிர் விட்டு பெட்டிக்குள் ஒடுங்கிக் கிடக்கிறது.

வைரவப் பிள்ளையரை அந்தப் பாடசாலைக்கு ஆசிரியராக வந்த நாள் தொடங்கி அறிவேன். நம்மை விட ஒரு 10-15 வயது அதிகமானவராக இருக்கலாம். கமக்காரனாக இருந்தாலும் கௌரவமாகவும் கண்ணியமாகவும் எளிமையாக வும் வாழ்ந்து வருபவர். மக்கள் அரசமரியாதை கொடுத்துப் பழகினாலும் அவர் நட்புடனும் தோழமையுடனும்தான் பழகுவார். இவருடைய சிந்தனைகளும் சகல விடயங்களையும் அலசி ஆராயும் தன்மையும், புத்தகப் பூச்சியான எனக்கு அருசையாக இருக்கும். 'இவரென்ன எட்டாம் வகுப்பு மட்டுமாவது படித்திருப்பாரோ தெரியாது, பெரிய ஆய்வாளன் போலப் பேச்சு' எனப்பொ-றாமைப் படுவேன்.

ஒருநாள் ரைம்ஸ் எனும் செய்தித்தாளை விரித்து வைத்துக்கொண்டு வாசிப்பது போலப் பாசாங்கு செய்து கொண்டிருந்தார்.

**- குறமகள் -**

'என்னையா என்னவாம் பேப்பரிலே?'
'பார்க்கப் போறீங்களா இந்தாங்கோ பாருங்கோ'
எனக்கு இப்ப நேரமில்லை, நீங்கள் படித்துப் போட்டு பிறகு எனக்குச் சொல்லுங்கோ'

கழன்று வரும் முயற்சி, பட்டதாரி ஆசிரியர்தான் நான். அரசின் சுய மொழிக் கொள்கை - தாய் மொழிக்கல்வி - அரசியல் வாதிகளின் பிறமொழி வெறுப்புப் போதனை இவற்றால் ஆங்கிலம் சுத்தசூனியம். அதனால் அவருடைய சாயத்தைக் கழற்றேலாமல் போயிற்று. அன்று மாலை அரசியலிலிருந்து இராசிபலன் வரை அத்தனையும் சொல்லித்தீர்த்தார். கை துலாக்கொடி பின்னியபடி மூளையின் செல்களிலிருந்து உருவித் தந்து கொண்டே இருந்தார்.

திகைப்பு, திகைப்பென்ற திகைப்பு! வெள்ளை வேட்டி சட்டையோடு நானெங்கே! விடலைப்பருவ உருவோடு தோளில் துவாய், இடுப்பில் சாரத்தோடும் வேலை செய்யும் அவரெங்கே! அன்றுவரை சுமுகமாக யாவருடனும் சிரித்துக் கதைத்துப் பழகினாலும் உள்ளூர ஒரு மிதப்பு. நான்தான் அங்கே கூடப்படித்தவன், பலராலும் கௌரவிக்கப்பட வேண்டியவன், உயர்ந்த நிலையில் இருப்பவன் எனும் தற்பெருமை - தவிடுபொடியாயிற்று. வெட்கமும் துக்கமும் மேலிட அவரது பள்ளிப் படிப்பை பற்றிக் கேட்டேன்.

வைரவப்பிள்ளை ஒரு கமக்காரனின் மைந்தன். தந்தைக்கு உதவிசெய்து கொண்டே கல்விப் பொதுத்தராதரம் உயர்நிலை வரை படித்தவர். வர்த்தகப் பிரிவில் புள்ளிகள் பெற்றும் பல்கலைக்கழகம் புகமுடியவில்லை. அரச அலுவலகங்களில் வேலைக்காக ஏறி இறங்கினார். சிபாரிசும் பணமும் இல்லாமல் முடியாது எனும் நிலையில் பேராசிரியர் ஒருவர் 'படித்த வாலிபர்கள் தமது அறிவை விவசாயத்தில் புகுத்தினால் மாதவருமானத்தை விட பன்மடங்கு அதிகமாகவே பெறலாம். சுயகௌரவம் உண்டு'. என்றதால் தோட்டத்தில் இறங்கிவிட்டார். விவசாயக் கல்லூரியில் இடைக்கிடை சென்று சில பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டு தோட்ட உற்பத்திகளை விரிவாக்கினார். தந்தைக்கு ஓய்வு கொடுத்தும் பலருக்கு தொழில்வாய்ப்புக் கொடுத்தும் செல்வாக்காக வாழ்கிறார். மும்மொழி வல்லவரான படியால் அஞ்சலகத்திலிருந்துகூட மொழி பெயர்ப்பிக்க வருவார்கள்.

இருவரும் இணைபிரியா நண்பர்களானதுடன் அக்கிராமத்திலேயே மணம் செய்து ஒன்றிவிட்டேன். இனித்தான் எங்கள் கதாநாயகனைப் பற்றிச் சொல்லப் போகின்றேன்.

அவருக்கு ஒருமகன் இருக்கின்றான். அம்மாவின் செல்லம். அப்பா அரச அலுவலர் ஆகாததற்குக் காரணம் அவருடைய அப்புவோடு தோட்டவேலை செய்து பழகியது தான் அல்லது தங்கள் உடைநடை பாவனை எல்லாம் கொழும்பாரை ஒத்திருக்குமே என்பது அவள் ஏக்கம். ஆயினும் பதிக்கேற்ற பத்தினியாகத்தான் வாழ்கிறாள்.

பாடசாலைக்கு வருவான் முருகதாஸ். படிப்பான் - பத்துநிமிடத்துள் படிப்பு, வேலை முடிந்துவிடும். அப்படிக் கெட்டிக்காரன். மிகுதி 20 நிமிடமும் நொட்டு நொடுக்கு, நோண்டல்தான். வகுப்பின் ஒவ்வொரு இடத்திலிருந்தும் 'வாத்தியார்! தாசன் கிள்ளுறான், அடிக்கிறான், பின்னலை இழுத்து விழுத்துகிறான், சிலேட்டை உடைத்துப்போட்டான்' என்ற முறைப்பாடுகள். அந்த இடத்தில் போய் என்ன நடந்தது எனக் கேட்பதன் முன் வேறொரு மூலையில் இருந்து 'ஐயோ! வாத்தியார் முகத்திலை துப்பிப்போட்டான்'.

மேலதிகமான வேலைகளைக் கொடுத்தாலும் இன்னொரு 10 நிமிடம்தான். சில சமயங்களில் ஆசிரியர் வேறுபிள்ளைகளோடு வேலை செய்தால் இவன் வெளியே ஓடிவிடுவான். கலைச்சுப் பிடிக்கவா முடியும். யார் வளவிலாவது ஏதாவது அழிவுகள் அட்டுழியங்கள் செய்துவிடுவான். அதனால் பெற்றாருக்கு கவலை. சாம, பேத, தான, தண்டங்களால் ஒரு பிரயோசனமும் இல்லை.

அந்த மனிதனுக்காக கிராமம் இவனைச் சகித்துக் கொண்டிருந்தது. அதுமாத்திரமல்ல அவரும் அந்த அழிவுகளுக்காக ஒன்றுக்கு பத்தாகவே நட்டஈடும் (அவர்கள் கேட்காதபோதும்கூட) கொடுத்து வந்தார். மீத்திறன் மாணவனை எப்படி அடக்கிவைக்க முடியும். தாய் செல்லங் கொடாதிருந்தால் அவனது ஓய்வு நேரம் தந்தையுடனும் தோட்டத்துடனுன் போயிருக்கும்.

பட்டணத்துக்குப் போய் பிரத்தியேகப் படிப்புக்களையும் ஒழுங்குபண்ணிக் கொடுத்தார் வைரவப்பிள்ளை. நண்பர்களுக்கும் சேர்த்து உணவுக்கடைகளில் கடன் ஏற்றினான் மைந்தன். தோட்டங்கள், வயல்கள் வருமானம் தந்து கொண்டிருந்தமையால் சரிக்கட்ட முடிந்தது.

பல்கலைக்கழகம் சென்றதும் ஒரு பகுதி காணிகள் விற்கவேண்டி வந்துவிட்டது. அவர் சேர்த்த காணிகள்தாம். படிப்பு முடிந்து பட்டத்தோடு வரவும், ஊர்நிலைமை மோசமாகச் சென்று கொண்டு இருந்தது. இராணுவக் கெடுபிடி ஒருபுறம், இயக்கங்கள் பலவற்றின் தோற்றம். தாசுக்கு மேல்நாடு போகும் ஆசை தொட்டு விட்டது.

'நண்பன் கேட்டான் இயக்கத்துக்கு வா என்று - சேகர் சொன்னான் தன்ரை இயக்கத்துக்கு வரும்படி - ஆமி கலைச்சான் உந்துருளியை ஒழுங்கைகளூடாக விட்டு வந்திட்டன்' இப்படி இஞ்சினியராய் இளந்தாரியாய் வந்தும் வெடிப்புளுகுகள் தான். பெற்ற மனங்கள், இன்னொரு பகுதிக் காணியை விற்று முகவர் மூலமாகக் கனடாவுக்கு அனுப்பி வைத்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர்.

இரண்டு மாதத்தில் கடிதம் வந்தது என்னுடைய தகுதிக்கும் தகைமைக்கும் தகுந்த வேலை கிடைக்குதில்லை. கோப்பை கழுவுற வேலைக்கு உங்கள் மகன் போவதை நீங்களே விரும்பமாட்டீர்கள். வீட்டு வாடகை செலவுகளுக்கு முக்கந்தர் சின்னத்தம்பியின் மகன் குடும்பம் இங்கே இருக்கிறது. அவர்களிடம் 1,000 டொலர் வாங்கினேன். தங்கள் வீட்டுக்கு அனுப்புவதற்குரிய காசாம் ஆனபடியால் 45,000 ரூபாவை அங்கே கொடுத்து விடவும்.

டொலரில் பட்டகடன் ரூபாயில் அழிக்க வேண்டியுள்ளதே எனக் கவலைப்பட்டு தேடிய தேட்டம் வரை விற்றனுப்பலாம். ஆனால் முதிசத்தில் கைவைக்கமாட்டேன் என்று வைரவபிள்ளை சொல்லியிருந்தார்.

அவரின் பிரச்சினையை தீர்ப்பதுபோல் கொள்ளை அடிக்க வந்த இலங்கை இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்டோம். மாவட்டத்துக்குள்ளான இடப்பெயர்வு. பாடசாலையும் அவரது தோட்டமும் இராணுவ முகாம்கள் ஆயின. இந்த விவரங்கள் முருகதாசுக்குத் தெரிவிக்கப்பட்டது. இருமாதங்களாகத் தொடர்பில்லை.

அவன்ரை வெண்றேசன் வாழ்க்கைக்கு வழிதேடிக் கொண்டான் என, வந்த கடிதத்தை என்னிடம் தந்தார். படிப்பிலும், உத்தியோகத்திலும், அந்தஸ்திலும் பிரபலமாயிருந்த, ஏணிவைத்தாலும் எட்டமுடியாத ஒருவரின் மகள் தன்னைக் காதலித்ததாகவும்; அப்பிரமுகர் தன் கல்வித்தகைமைச் சான்றிதழைப் பார்த்து விட்டு சம்மதம் தந்ததாகவும்; அங்கே ஒருவருடப் படிப்பிற்கு உவ்விடப் பல்கலைக்கழகத்திலிருந்து தமது தவணைப்புள்ளிகளைப் பெற்றுத்தருமாறு கேட்டதாகவும் எழுதியிருந்தான் 'அப்பாடா' எனப் பெருமூச்சுவிட்டேன்.

விரக்தியாக என்னைப் பார்த்தார். 'புளியங் கொம்பாகத்தான் பார்த்து, கலைச்சுக் கலைச்சுக் காதலித்திருப்பான். இனி அவர் ஒவ்வொன்றாக விற்கட்டும், பாரும் படத்தை போட்டோவில் வாக்குக் கண்ணும் தடித்த உடலுமான கரிக்குட்டி ஒன்று. இவனோ கோட், சூட், ரை யோடு வெள்ளைக்காரத்துரை மாதிரி வாட்டசாட்டமாய் அழகாய் இருந்தான்.

நாங்கள் அறிந்த அழகேந்திரா என்றால் இப்படி ஏமாறமாட்டாரே. ஒருவேளை பெண்ணுக்கு வேறிடம் வாய்க்கவில்லையோ? இங்கேயே எத்தனை அல்சேஷன் நாய் வைச்சிருந்தவை. அங்கை இதுவும் ஒன்றாய் இருந்திட்டுப் போகட்டும் என்றாக்கும் தாய் மாத்திரம் சொன்னாள்.

அதற்கென்ன என்ரை பிள்ளை தனிச்சுப்போச்சு, நேரகாலத்துக்கு சாப்பிடுகுதோ தெரியாது. எவ்வளவு கவலைப்பட்டனான்.

அடுத்த இராணுவ விரட்டு வெளிமாவட்டங்களுக்கு ஓட்டம் ஐயாவும் அம்மாவும் தடதடத்துப் போனார்கள். அவர்களைத் தனியாக விட விருப்பமில்லை. ஒரு வீடெடுத்து அவர்களுக்கு ஓர் அறையும் வெளியில் பத்தி இறக்கி சமைக்கவும் கொடுத்து, மற்ற அறை, குசினி, கூடம் எல்லாம் நாலுபிள்ளைகளும் நாமும் தங்கினோம்.

'நான் சாகப்போறன் தம்பியைக் கூப்பிடுங்கோ' அரட்டிக்கொண்டே சா படுக்கையில் அறிவித்தோம்.

'பரீட்சை வந்து கொண்டிருக்கிறது, வேலை இன்னமும் தேடவில்லை, எது நடந்தாலும் என்னால் வரமுடியாது. இளமைத் தோற்றத்தோடு என்ரை அம்மா என் நெஞ்சில் பதிந்து இருக்கிறா. மாஸ்டர் நீங்கள்தான் ஏதும் சொல்லிச் சமாளிச்சு விடுங்கோ. காசும் ஒன்றும் அனுப்பேலாது.

வவுனியாவுக்கு வந்து தொலைபேசியில் கதைத்து வீடு திரும்பு முன்னரே தாயார் போய்விட்டார். பிள்ளையர் தனிச்சுப் போய்விட்டார், தவிச்சும் போய்விட்டார். 'தாய்க்குக் கொள்ளி போடாதவன் தனக்கும் கொள்ளி போடக்கூடாது என வைராக்கியமாகச் சொல்வார்'.

கஞ்சியோ, கூழோ நாம் சமைப்பது தான் அவருக்கும். மௌனமாகிவிட்டார். வளவுக்குள் சில மரக்கறி வகைகளை வைத்து தூரத்தே சென்று நீரள்ளி வந்து வார்ப்பார். வேலியில் கறிமுருங்கைத் தடிகளை நடுவார். எங்கோ சென்று புளியம் பழம் பொறுக்கி வந்து உடைத்துக்காய வைப்பார். சில நாட்களுக்குள்ளேயே அரிசியும் உப்புந் தவிர மற்றவை கிடைத்துவிட்டன. நானும் ஓய்வு பெற்று விட்டேன்.

கடிதங்கள் ஒன்றும் வரத்துப் போக்கில்லை. மூன்று வருடங்கள் ஓடிப்போயின. பிள்ளையர் தளர்ந்து நோய்வாய்ப்பட்டு விட்டார். படுக்கையிலேயே கிடக்க ஆரம்பித்தார். மகனைக் கண்ணால் பார்க்க வேணும் எனும் ஆசை தொட்டு விட்டது போலும். எனக்கு ஓய்வூதியம் வர வருடக்கணக்காகிறது என நேரே கொழும்பு போய் ஓர் சீர் பண்ணப் புறப்பட்டேன்.

'தம்பியோடு பேசுவியா' 'பார்ப்போம்' கண்ணில் ஒரு ஏக்கம். இதுவரை ஒளிர்ந்த அந்த வெறுப்புக்கனலைக் காணவில்லை. இரண்டுமாதம் கொழும்பில். பல அறிவுறுத்தல். நேருவைப்பிடி, கந்தசாமியைப்பிடி, திவகலாலாவுக்குச் சொல்லு. மாளிகாவத்தைக்கு போ. முஸ்லீம் இளைஞன் ஒருவன் உதவி செய்வான். கொஞ்சம் காசு இறுக்க வேணும். பெரராவும் நல்லவன்.

முதல் மேசையால் நகரவைக்கவே, ADE மட்டத்து அலுவலர் இருவிரல்களையும் உரசிக்காண்பித்து 'கோப்பைத்' தருகிறார். இளைஞர் '200 ரூபா வைத்துக் கொடு' என்றார்.

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

**SOFT NET SOLUTION**
**Tax Service**
வருமானவரி தேவைகளைப் பூர்த்திசெய்ய அழையுங்கள்
*Ahilan* - **Tel: 416.321.3866**


223 - 5225 Finch Avenue East. Toronto. M1S 5W8
*Email: softnet@rogers.com*

# பழமொழிகள்

பழமொழிகள் அனுபவக்கூற்றுக்களாகும். பன்னெடுங்காலமாக இவை வழங்கி வருதலால் பழைய மொழி என்னும் கருத்தில் பழமொழிகள் எனப்படுகின்றன. இவற்றை பழம் மொழிகள் என்று கூறுவதிலும் தவறில்லை எனலாம். வாழ்க்கை ஓட்டத்தில் அனுபவித்தது கனிந்தமொழி இவை என்றும் கூறலாம். பழமொழிகள் கற்றோர் இடையே மட்டுமன்றி கிராமிய மக்களிடையேயும் வழங்கி வருகின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் கல்வி அறிவு இல்லாத கிராமிய மக்கள் தாம் தங்கள் பேச்சின் இடையில் பழமொழிகளை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். உரைநடையில் ஓரிரு பக்கங்களில் எழுதி விளக்க வேண்டிய கருத்துக்களை பழமொழிகள் ஒரேவரியில் விளக்கிவிடுகின்றன. அத்துடன் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருக்கும் நிகழ்ச்சிகளையே கூறி நம்மனதில் உடனே பதியும் படியும் செய்து விடுகின்றன இவை சுருங்கக்கூறி விளங்க வைத்தலில் முதன்மை வகிக்கின்றன.

நா. க. சிவராமலிங்கம்

பழமொழிகளின் தொன்மையை அறிய உதவுவது பதிணென்கீழ் கணக்கில் உள்ள ‘பழமொழி’ என்ற நூலாகும். இதன் காலம் எட்டாம் நூற்றாண்டாகும். இதில் 400 பழமொழிகள் உள்ளன. இதன் ஆசிரியர் முன்னுறையனார் என்னும் சைனமதத்தினர். பழமொழிகள் யாவும் ஒன்று திரட்டப்பட்டு நூல்வடிவம் பெறவில்லை. வாய்மூலமாகவே பழமொழிகள் இன்றுவரை வழங்கி வருகின்றன. இதன் காரணமாக சொற்பிழை ஏற்பட்டு அது நாளடைவில் திரிந்து, மூலப்பழமொழிகளின் உண்மை உருவமே மறைந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. பல பழமொழிகளில் எழுத்துக்கள் குறைதல், எழுத்துக்கள் இடம்மாறுதல், சொற்கள் திரிதல், நிறுத்த வேண்டிய இடத்தை சேர்த்து கூறல் போன்ற குறைகள் காரணமாக இவற்றின் உண்மைப்பொருள் மறைந்து மாறாக தவறான பொருள் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணத்திற்கு சில பழமொழிகளைப் பார்ப்போம்.
**‘தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்’.**

தொட்டிலில் குழந்தையாக இருக்கும்பொழுது ஒருவனுக்கு உண்டான பழக்கம் சுடுகாடு வரையும் தொடரும் என்பது இதன் கருத்து. தொட்டிலில் படுத்து கைவிரலை சுவைக்கும் குழந்தை ஓரிரு வருடங்களில் அப்பழக்கத்தை கைவிட்டு விடுவதில்லையா? எனவே தொட்டில் பழக்கம் சரியன்று. தொட்டிப்பழக்கம் என்பதே சரியானது. தொட்டி என்ற சொல் கள்ளைக் குறிக்கும். கள்ளைக் குடிக்கும் ஒருவன் இறக்கும் வரையும் அப்பழக்கத்தை கைவிடமாட்டான் என்ற பொருளில் உருவானது தான் தொட்டிப்பழக்கம் சுடுகாடு மட்டும் என்ற பழமொழி. தொட்டி என்ற சொல் நீண்டு தொட்டில் என உருமாறியுள்ளது.

**‘கடைத் தேங்காயை எடுத்து**
**வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதே’.**

இப்பழமொழியை ஆங்கிலத்தில் ‘Donot rub peter to pay paul’ என கூறுவர். நமக்கு உரிமையில்லாத ஒரு பொருளை வலிந்து கைப்பற்றி பிறருக்கு கொடுக்கக் கூடாது என்ற பொருளில் இப்பழமொழி வழக்கிலுள்ளது. இதன் உண்மைப்பொருளை ஆராய்வோம்.

இறைவன் திருமுன் நம்மிடமுள்ள ஆணவம், கன்மம், மாயை இம்மூன்றையும் ஒழித்துவிடவேண்டும். இம்மும்மலங்களின் கூட்டு உருவே தேங்காய். வெளியில் உள்ள மட்டை ஆணவமலம். உள்ளே உள்ள நார் கன்ம மலம். தேங்காயின் ஓடு மாயமலம். எனவே தேங்காயை உடைப்பதின் மூலம் மும்மலங்களையும் ஒழிப்பதாக பிரதிக்ஞை செய்கிறோம். இதுவே தேங்காய் உடைப்பதன் தத்துவம்.

ஸ்ரீ கரணம் என்ற நூல் எப்படிப்பட்ட தேங்காயை இறைவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறுகின்றது. மிகவும் இளசானவை, மிகவும் முதிர்ந்தவை, கோணலானவை, நீண்டவடிவம் உடையன, கண் இல்லாதவை, குடுமி இல்லாதவை, அழுகலானவை, ஒல்லியானவை, நீர் இல்லாதவை, கொப்பரை உருவம் அடைந்தவை, மிகச் சிறியவை ஆகியன இறைவனுக்குப் படைக்க உகந்தவை அல்ல. இவற்றை, தாழ்ந்தவை என்ற பொருளில் ‘கடைத்தேங்காய்’ என்பர்.

இப்படிப்பட்ட தேங்காய்களை இனம் பிரித்து எடுத்து ஒதுக்கிவிட வேண்டும். நல்ல தேங்காய்களையே இறைவனுக்கு நிவேதனம் செய்ய வேண்டும். வழித்தல் என்பதன் கருத்து ஒதுக்குதலாகும். எனவே கடைத் தேங்காயை எடுத்து வழி, பிள்ளையாருக்கு உடைக்காதே என்னும் போது இதன் உண்மையான கருத்து விளங்கும்.

**‘கல்லைக்கண்டால் நாயைக் காணோம்,**
**நாயைக்கண்டால் கல்லைக் காணோம்’**

சிற்றில் சிதைத்தல், அப்பூச்சி காட்டுதல் என சிறுபிள்ளை குறும்புகளை சிற்றிலக்கியம் காட்டுகிறது. நாயைக் கல்லால் அடித்தலும் சிறுபிள்ளைக் குறும்பேயாகும். குரைக்காமலும், கடிக்காமல் இருக்கும் நாயும் சிறுபிள்ளைகளின் குறும்புக்கு தப்புவதில்லை. இப்பழமொழியை உற்று நோக்கினால் நாயைக்கல்லால் அடிப்பது இன்றியமையாத கடமை போலவும் அதற்கு அனுசரணையாக கல்கிடைத்த போதும் நாயைக் காணாத போதும் மனம் நொந்து வருந்துவது போல இதன் கருத்து அமைந்துள்ளது. இதுவல்ல இதன் கருத்து.

தலைசிறந்த சிற்பி ஒருவன் சாம்பல் நிறக்கல் ஒன்றினால் ஒரு நாய்படுத்திருப்பது போல ஒரு சிலை செதுக்குகின்றான். தூரத்திலிருந்து மண்டபத்தை நோக்கிச் செல்லும் ஒருவன் அதை உண்மையான நாய் என்றெண்ணி அருகில் செல்ல பயப்படுகின்றான். ஆனால் சிறிது சிறிதாக முன்னேறிச் செல்ல, அது உண்மையான உயிருள்ள நாய் என்பதை உணரும்போது அதை கல் என உணருகின்றான். கல் என அதை உணர்ந்த பின்னர் அதில் மறைந்திருக்கும் நாயை உணரவில்லை. அதை நாயாக எண்ணி மருண்ட வேளையில் அது கல் என உணரவில்லை. ஸ்தூல உருவம் சூட்சுமத்தை மறைக்கிறது. சூட்சுமத்தை உணரும் பொழுது ஸ்தூலம் மறைக்கின்றது. இக்கருத்தையே ‘மரத்தில் மறைந்தது மாமத யானை, மரத்தை மறைத்தது மாமத யானை’ என்றார் திருமூலர். கல்லிலே சிற்பி நாய் உருவம் செதுக்கினாற் போல மரத்தச்சன் ஒரு யானையின் உருவை மரத்தில் செய்துள்ளதாக திருமூலர் கூறுகிறார். எனவே மாயை உண்மையை மறைக்கின்றது. மாயை விலகும் போது உண்மை உணரப்படுகின்றது. இதுதான் இப்பழமொழியின் விளக்கம்.

மாறுபட்டும் திரிந்தும், மயங்கியும் பல பழமொழிகள் வழக்கிலுள்ளன. அவற்றின் உண்மைப் பொருளை கண்டறிவது கற்றறிந்தோர் கடன்.

‘எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும்
அப்பொருள் மெய்பொருள் காண்பதறிவு.’
என்பது தமிழ் மறை.





# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers - 217 March 01, 2008

1.Solve for x $\log_2(9\text{-}2^x) = (3 - x)$ ..>> $2^{(3\text{-}x)} = 9 - 2^x$

>> $2^{3\text{-} x} = 9 - 2^x$ >> $2^3 / 2^x = 9 - 2^x$

>.> $8 = 9X.2^x - (2^x)^2$ >>>>>> $(2^x)^2 - 9.2^x + 8 = 0$

>>> $(2^x - 8)(2^x - 1) = 0$ >>> $2^x = 8$ or $2^x = 1$

>>> $2^x = 2^3$ or $2^x = 2^0$ >>> Therefore x = 3, x = 0

2. In Triangle ABC
Sum AD/ AB = 3/5
Let AD = 3 and AB = 5
So Sin C = AD/ AC = ¼ = 3/12. Thus AC = 12
Sum $DC^2 = AC^2 - AD^2 = 144 - 9 = 135$
